ஏ

# அருத்தமிழ் ஞானம்

அரம் 2 உ　　உண்மையே கடவுள்　　சிந்தனை 4 ச

**சாதி, சமய, இன வேற்றுமையற்ற**
**ஆத்ம சிந்தனைச் சஞ்சிகை.**

புதுமைகள் விதைப்போம் புதுயுகம் படைப்போம்!
மதுவை மறப்போம் பெருமைகள் குவிப்போம்!
தொழில்வளம் பெருக்கி வறுமையை விரட்டி
அழியாத காவியம் அவனியில் சமைப்போம்!

**ஆடி ஆவணி – 1993**

திருவனரின் சிந்தனைத் தொகுப்புக்களும்
பிற ஆக்கங்களும்.

**விநாயகர் தரும நிதிய இலவச வெளியீடு.**

★ உடலுழைப்பு — சிக்கனம் — சமத்துவம். ★



# சமர்ப்பணம்

இம் மாநிலம் உருவாகி அதில் உயிரினங்கள் உருவாக தங்கள்சக்தியை எந்நேரமும் உதவிக் கொண்டிருக்கும் ஐந்து பூதங்களான காற்று, தீ, நீர், நிலம், ஆகாயம் இவற்றிற்கும், எம்மை உருவாக்கிய தந்தை, தாய், குரு முதலானோருக்கும், நாம் வாழ உணவு அளித்துக் கொண்டிருக்கும் தாவர வர்க்கம் முதல் மனிதகுலம் வரையான சகல சீவராசிகட்கும் எமது வணக்கத்தைச் செலுத்தி இவர்கள் பாதாரகமலங்கட்கு இந் நூலைச் சமர்ப்பணம் செய்வதில் பூரண ஆத்ம திருப்தி அடைகிறோம்.

## இதழின் உள்ளே...

★ யப்பானியரின்வாழ்க்கை வரலாறும் அவர்களது அறநெறிச் சிந்தனைகளும்.

★ தொழில் வளம் பெருக்குவோம்.

★ மக்கள் சிந்தனை மாற வேண்டுமோனால் சூழல் நன்னிலை அவசியம்.

★ எம். எஸ். உதயமூர்த்தி வாழ்க்கைக் குறிப்பு.

★ பனை வெல்லம்.

★ கடவுள் நம்பிக்கை.

அறத் தமிழ் ஞானம்
ஆத்ம சிந்தனைச் சஞ்சிகை

அறம் ௨ உ  சிந்தனை ௪ ச

நிறுவனரின்
சிந்தனைத் தொகுப்புக்களும்
பிற ஆக்கமும்.

இலவச வெளியீடு:
விநாயகர் தரும நிதியம்

பிரதிகள் 1600 — பக்கங்கள் 48

முடிவு விலை: 13/15

தொடர்பு:
விநாயகர் தரும நிதியம்
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.



# அறத்தமிழ் ஞான சிந்தனைகள்

இவ்வெளியீடுகள் சம்பந்தமாக தனிநபர்கள், பொது நிறுவனங்கள் தங்கள் கருத்துக்களை எமக்குத் தெரிவிக்கும்படி நன்றியுடன் வேண்டுகிறோம். எமது நிறுவனம் பயன்கருதாப் பணியாக உடல் உழைப்பை நல்கி இவ்வெளியீடுகளை வெளியிடுவதில் பெரும் ஆன்மீக மகிழ்ச்சியடைகிறது. இவ்வெளியீடுகளில் குறிப்பிடப் பெற்றவை எமது எண்ணத்திற்கேற்ப, சொந்த வாழ்க்கையில் செயல்படுத்தி அனுபவத்தில் கண்ட உண்மைகளாகும். நாம் சிறுவயதில் ஒருநேர உணவுக்கு கஷ்டமடைந்த நிலையில் உடலுழைப்பால் மூடை சுமந்து சொல்லொணாத கஷ்டங்களை அனுபவித்தும் உண்மை தவறுவதில்லை. கடமையை ஆற்றுவதில் எவ்வித சிரமத்தையும் பொருட்படுத்தாது செயல் பெற்றதால் இன்று உண்மைப் பொருளின் ஒளி விளங்குகிறது. எமது பெயரையோ சுகவாழ்வையோ விரும்பாது கடமையை உணர்ந்து செயல் பெறுகிறோம். எவரும் இதே விதமாக செயல்பெற்றால் பொருளைத்தேடி அலைய வேண்டியதில்லை.

எமது நிதியம் அரிசிஆலையில் இருந்து பெறும் வருவாயைக் கொண்டே செயல்பெறுகிறது. தற்காலம் வருமானம் குறைந்துள்ளதால் வெளியீடுகள் காலதாமதமாகவே வெளிவருகின்றன. ஆன்ம உண்மையென்று நாம் உணருபவைகளை வெளியிட்டு மக்களுக்குத் தெரியப்படுத்துவது எமது கடமையென உணருகிறோம். வேறு எவரிடமும் பணம் பெற்று தருமம் செய்ய நாம் விரும்பவில்லை.

எமது வாழ்க்கையில் இலவச சாமான்களை என்றும் வாங்கியது கிடையாது. எமது நிறுவன ஆலை இராணுவ நடவடிக்கையின் போது உடைக்கப்பெற்றும் நாம் எவரிடமும் நஷ்டம் கேட்டதில்லை! எமது கையால் உழையாத பணம் எமக்குத் தேவையில்லை. ஆன்மா ஞான ஒளியில் நற்கதி அடைவதே எமது குறிக்கோளாகும்.

ஆகவே வெளியீடுகள் வருவதில் ஏற்படும் காலதாமதத்தைப் பொருட்படுத்த வேண்டாமென அன்புடனும், பணிவுடனும் வேண்டுகிறோம்.

— நிறுவனர்,
விநாயகர் தரும நிதியம்.

புலோலி மேற்கு.

ள —

# யப்பானியரின் வாழ்க்கை வரலாறும்

அவர்களது

# அறநெறிச் சிந்தனைகளும்

## 1940-ல் இருந்து இன்று வரையும்.

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் மிகவும் ஏழ்மை நிலையில் வாழ்ந்த யப்பான், தமது ஜீவனோபாயத்திற்காக தம் நாட்டில் உற்பத்தியாகும் பலவகைப் பொருட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி விற்றுவரலாகினர். அக்காலத்தில் இங்கிலாந்தில் செய்யப் பெற்ற ஒரு பென்சில் இலங்கையில் 4 சதமாகவும், ஒரு தீப்பெட்டி மூன்று சதமாகவும், பேனை எழுபத்தைந்து சதமாகவும் மற்றும் பல வகைப் பொருட்கள் கூடிய விலையிலும் விற்பனையாகி வந்தது. இவை எமது இளம்பராய வயதில் நாம் அறிந்த உண்மைகளாகும். இதே காலப்பகுதியில் யப்பானில் உற்பத்தி செய்யப்பட்ட 1 பென்சில் 1 சதமாகவும், 1 பேனை 30 சதமாகவும், 2 தீப்பெட்டி 1 சதமாகவும் விளையாட்டுச் சாமான்கள், பிடவைகள், துணிவகைகள் மற்றும் இரும்புப்பொறி உபகரணங்கள் எல்லாம் ஆங்கிலேயர் விற்ற விலையில் ¼ பங்கு விலைக்கு யப்பானியர் விற்று வந்தனர்.

1940-ம் ஆண்டளவில் ஜேர்மனி ஆங்கிலேயருக்கு எதிராக கிட்லரின் தலைமையில் துவங்கிய போரில் யப்பானும் இணைந்து கொண்டது. இப்போரில் யப்பானியர் சிங்கப்பூரில் தற்கொலைப்படை தாக்குதல் பாணியில் குண்டுகள் நிறைந்த விமானத்தை ''பிறின்ஸ் ஒப் வேல்ஸ்'' ''றிபல்ஸ்'' எனப்படும் இருபெரும் கடற்படைக் கப்பல்களின் புகை போக்கிகளுக்குள் செலுத்தி இரு கப்பல்களையும் நிர்மூலமாக்கி தமது திறமையை உணர்த்தினார்கள். இதே வகையில் திருகோணமலையிலும் எண்ணைக் குதங்கள் – கப்பல்கள் போன்றவற்றை குண்டு போட்டு அழித்து பெரும் அட்டூழியங்களை விளைவித்தனர்.

இவ்வகையான அட்டூழியங்களை விளைவித்த யப்பானை அடக்கி வைக்கவேண்டிய நிலை ஆங்கிலேயருக்கு ஏற்பட்டது. அமெரிக்காவின் துணையுட ஹிரோசிமா, நாகசாக்தி என்ற இருபெரும் நகரங்களை அணுகுண்டு போட்டு அழித்தனர். இக்குண்டு வீச்சினால் பல இலட்சக் கணக்கான மக்கள் மடிந்தனர். பல இலட்சமானோர் அங்கவீனர்களா யினர். யப்பான் நிர்மூலமானது. பல ஆயிரக்கணக்கானவர் மாற்ற



முடியாத நோய்களுக்கு ஆளாகி அவதிப்பட்டனர். யப்பான் சரணாகதி யடைய வேண்டிய நிலைக்கு ஆளானது. ''தன்வினை தன்னைச்சுடும்'' என்பதற்கொப்ப பாரிய அழிப்பினால் அவர்கள் தேசமே அழியவேண் டியநிலை ஏற்பட்டது. தம் நாட்டில் ஏற்பட்ட அழிவுக்காக தெய்வத்தை அவர்கள் நோகவில்லை. தமது விதியை நோகவில்லை; தமது மக்களை நோகவில்லை. பொருளாதாரத்தை நோகவில்லை. மாறாக தமது வினைப்பயனால் விளைந்த விபரீதம் என்பதையும் அவ்வினைப்பயனை நீக்குவதற்கு தொழிலே தெய்வம் என்பதையும் உணர்ந்து கொண்டார் கள்,

எமது நாடு அழிந்து விட்டதே. அதை புனர்நிர்மாணம் செய்து தாருங்கள் என உலகநாடுகளிடம் கையேந்தவில்லை. எவரின் உதவி யையும் எதிர்பாராமல் தாமேதம் நாட்டைக் கட்டிஎழுப்ப வேண்டும் என்ற அறநெறிச் சிந்தனையுடன் செயற்பட்டு தமது கடின உழைப்பு மூலம் தொழில்துறைகளில் காலடி எடுத்து வைத்தனர். அவர்கள் எந்தவிதமான பணிகளையும் அணுவளவு செக்கன் தவறாமல் குறித்த நேரத்தில் ஒரு ஒழுங்கு முறையில் செய்துமுடிக்கப் பழகிக் கொண்டனர். விஞ்ஞான அறிவை, ஆற்றலை வளர்த்து விஞ்ஞானப் பொருட்களை உருவாக்கப் பழகிக் கொண்டனர். மோட்டார் சைக்கிள், நீர் இறைக் கும் இயந்திரம் தொடக்கம் பெரிய கனரக வாகனங்கள் ஈறாக பல வகையான பொருட்களை தமது தொழில்நுட்பத்தைக் கொண்டே வடிவமைத்தனர். தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப் பெட்டி, கணனி, இயந்திர மனிதன் (கொம்பியூற்றர்) போன்ற பலவகையான பொருட்களையும் வடிவமைத்து சாதனை படைத்தனர். எவ்வகையான பொருட்கள் என்றாலும் தமது விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தி விதம்விதமாய் எந்தநாட்டுப் பொருட்களுக்கும் தரம் குறையாது திறமையாக ஆக்கப்பழகிக் கொண்டார்கள். இக் காரணங்களினால் இவர்களது பொருட்களே உலகசந்தையில் பெரும்இடத்தைப் பிடித்தது. இவர்களது தொழில்துறை முன்னேற்றத்தினால் பணம் மலைபோல் குவிகிறது. அவர்கள் சுவாசிக்கும் காற்றணு சுத்தமாய் அமைவதால் அவர்களின் சூக்கும தேகத்தில் ஒளியணு கூடுகிறது. ஒளியணு கூடுவ தால் அறநெறிச் சிந்தனை உருவாகிறது.

அவர்களது அறநெறிச் சிந்தனை காரணமாக மற்றைய நாடுக ளுக்கு கடனாகவும், உதவித் தொகையாகவும் அந்நாட்டு அபிவிருத்திக்கு பல கோடிக்கணக்கான பணத்தை ஒதுக்கி உதவி வருகிறார்கள் வேற்று நாட்டு மாணவர்களுக்கு தமது பல்கலைக் கழகங்களிலே புலமைப்பரிசில் மூலம் கல்விவசதிகள் செய்து கொடுத்து அந்நாட்டு பொருளாதார வளர்ச்சிக்கு உதவி செய்கிறார்கள். ஆனால் வேற்று நாட்டவருக்கு

தமது நாட்டில் தொழில் வாய்ப்பைக் கொடுப்பது இல்லை. பிறநாட்டார் தமதுநாட்டில் வேலைசெய்தால் தமது நாட்டின் கட்டுக்கோப்பான பொருளாதார வளங்களை சிதறடித்து விடுவார்கள் என்ற எண்ணமே இதற்குக் காரணம் என எண்ணத் தோன்றுகின்றது. யப்பானியர் ஒரு அணுவளவு வினாடியைத் தானும் வீணாக்காது தமது நாட்டின் பொருளாதார தொழில் மேம்பாட்டை வளர்ப்பதிலே தான் கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள்.

உழைப்பே தெய்வம், ஊதியமே செல்வம் என்ற கோட்பாட்டுக் கமைய தமது செயல், சிந்தை இரண்டையும் தம் நாட்டிற்காக அர்ப்பணித்து செயற்படுகின்றார்கள். எம்மைப்போல் பழம்பெருமை பேசும் விழாக்களையோ, சமய விழாக்களையோ, புராண படலங்கள் படிப்பதிலோ நேரத்தைக் கழியாது தானுண்டு தன் கடமையுண்டு என்று தன் நாட்டிற்காய் உடல் கஷ்டம் பாராது நாளும் பொழுதும் சேவை செய்கின்றார்கள்.

யப்பானில் சில வருடங்களின் முன் நடந்த ஒரு சம்பவத்தை அறிந்திருப்பது நன்று. அங்கேயுள்ள பாடசாலைகள் 8–30 க்கு ஆரம்பமாகின்றன. 8–15 க்கு பாடசாலை வாசல் மூடப்பெறுகிறது. சரியாக 8–15 க்கு போன மாணவி மூடப்பெறும் வாசல்கேற்றில் அகப்பட்டு உயிரிழக்கிறாள். இதைப்பற்றிய நீதிமன்ற விசாரணையில் கடமையை சரிவரச் செய்த பாதுகாவலர் குற்றமற்றவராகவும், அந்நேரம் மாணவியை அனுப்பிய பெற்றோர் தவறு செய்தவராகவும் தீர்மானிக்கப் பெறுகிறார்கள். கடமையே தெய்வம்!

தமது நாட்டில் உள்ள நிலப்பரப்பு முழுவதையும் சுத்தமாக வைத்திருக்கப் பழகிக் கொள்கின்றார்கள். தமது நாடளாவிய ரீதியில் சுகாதாரம் பேணி சுற்றுப்புறச் சூழலை சுகாதாரமாக வைத்திருக்கின்றார்கள். இக்காரணங்களினால் அவர்களது இதயத்தை இயக்கும் காற்று சுத்தமாக அமைவதால் அவர்களது சிந்தனைகள் அறநெறிச் சிந்தனையாகவே பௌர்ணமிக்கின்றது. இன்றைய யப்பானின் தலைநகரான டோக்கியோவின் சனத்தொகை 3 கோடியை நெருங்கியுள்ளது. இந்த சனநெருக்கடியை சமாளித்து நாட்டின் சுற்றுச் சூழலைப் பேணும் முகமாக கடலினுள் எழுபத்தையாயிரம் மக்கள் வாழக்கூடிய நகரத்தையே உருவாக்கி உள்ளார்கள். அங்கே வீட்டு வசதியுடன் விளையாட்டு மைதானம், நீச்சல் தடாகம் போன்ற வசதிகளை உருவாக்கி தேவஉலகம் என்று சொல்லக்கூடிய உலக சாதனை படைத்துள்ளனர். விதம்விதமான போக்குவரத்து வீதிகளை நகரமெங்கும் உருவாக்கி ஒவ்வொரு சாதி வாகனங்கட்கும் ஒவ்வொரு வீதிகளை நிர்மானித்துள்ளார்கள்.

47-ம் பக்கம் பார்க்கவும்...



ள —

# தொழில்வளம் பெருக்குவோம்

எம். எஸ். உதயமூர்த்தியின் சிந்தனைகள்.

மற்றான் தோட்டத்து மல்லிகை என்பதற்காக அதற்கு மணமில்லை என்று வாதிடக்கூடாது. நாம் நடுநிலையாளர்களை வரவேற்க வேண்டும், பாராட்ட வேண்டும். அவர்கள் ''சொல்வதில்; உண்மையிருக்குமோ'' என்று கவனித்துக் கேட்க வேண்டும்.

சிலசமயம் ஓரே விஷயத்தில் ஆழ்ந்து மூழ்கியிருப்பவன், பிற விஷயங்களையும் புதிய பார்வைகளையும் பார்க்க முடியாதவனாயிருக்கிறான். ஆனால் புதிய பாதை கண்டவர்களாலேயே இவ்வுலகம் முன்னேறி இருக்கிறது. புதிய நோக்கு நமக்குத் தேவை. விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் பலவும் ஒரு துறையிலுள்ள உண்மைகள் மற்றோர் துறையில் இறங்கும்போது ஏற்படுவனதான்.

மாறுபட்ட கருத்துக்கள் தான் மாற்றங்களுக்குக் காரணமாயிருக்கின்றன. மாறுதல்கள் வளர்ச்சிக்கு அறிகுறி. ஆனால், மாறுபட்ட கருத்துக்களையும் மாற்றங்களையும் மனித சமுதாயம் எளிதாக ஏற்றுக்கொள்வதில்லை. இருக்கின்ற நடைமுறைகள் மாறுபடும்போது ஒரு பயம் – பத்திரமின்மை – மனித உள்ளங்களில் தோன்றுகிறது.

அமீபாவிலிருந்து மனிதனாகும் வரை பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. ''கற்கால மனிதனாக வாழ்வைத் தொடங்கியவன் இன்று வானவெளிக்குப் போகின்றான்'' என்பதுவரை பலவகை மாற்றங்கள் மனிதவாழ்வில் நிகழ்ந்து மனித சமுதாயத்தை முன்னேற்றி உயர்த்தி இருக்கின்றன. மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்தவர்கள் பலருக்கு உயிரே போயிருக்கிறது.

நாளும் நாம் வளரவில்லையென்றால் வாழ்வை நாம் தோற்கவிட்டவர்களாவோம். வளர்ச்சி தான் – வாழ்வின் ஜீவத்துடிப்பு தான் – பல்வேறு விதங்களில் பரிணாம வளர்ச்சியாக உருவெடுக்கிறது.

இந்த அடிப்படை உண்மைகளுடன், ''நாடு அடுத்த கட்டத்தில் என்ன செய்ய வேண்டும்'' என்று நாம் கவனிப்போம். எங்கே செல்கிறது என்று தெரிந்து கொள்ள இன்று எங்கே இருக்கின்றோம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டின் முக்கியமான பிரச்சனைகளான ''வறுமை'', ''தொழில் வாய்ப்பு இல்லாமை''. இவைதீர நாம் என்ன செய்ய வேண்டும்? முதலில் ''எது நமது லட்சியம்?'' என்ற லட்சியத் தெளிவு வேண்டும். நாம் லட்சியத்தை அடைய லட்சியத்தில் பிடிப்பு – பற்று வேண்டும்.

''லட்சியங்கள் என்ன? லட்சியங்களை அடைய என்ன காரியங்கள் செய்ய வேண்டும்? எப்படித் திட்டம் வகுக்க வேண்டும்? எந்தக் காலக்கெடுவில் இவற்றை முடிக்க வேண்டும்?'' என்றவாறான கேள்விகளை முன்வைத்தே பிரபல தொழில் அறிஞர்கள் தம் அணுகுமுறைகளை மேற்கொள்கின்றார்கள். லட்சியங்களை முன்வைத்து நிர்வகிப்பது (*Management By Objective*). இது சொந்த வாழ்க்கைக்கும், நாட்டு வாழ்க்கைக்கும் பொருந்தும்.

விஷயங்கள் – பிரச்சனைகள் என்று வரும்போது எது முக்கியம் என்று நாம் பகுத்துணர வேண்டும். ஆங்கிலத்தில் இதையே (*Priorities*) ''முக்கியமானதை முதலில் செய்'' என்பார்கள்.

கேரளத்து எல்லையில் கண்ணகிக்குக் கோயில் எடுப்பது முக்கியமா? அல்லது வறுமையால் தாழ்ந்து போயிருக்கும் கிராமங்களில் தொழிலபிவிருத்தி செய்வது முக்கியமா? ஒரு பல்கலைக் கழகத்திற்குக் காலஞ்சென்ற எந்தக் கவிஞனின் பெயரை வைக்க வேண்டும் என்பதில் கருத்துச் செலுத்த வேண்டுமா? அல்லது தெருச் சுகாதாரத்தில் அக்கறைகாட்ட வேண்டுமா?

''எது முக்கியம்?'' என்ற கேள்வி நம் வாழ்க்கையையும் நாட்டு வாழ்க்கையையும் தொடும் மிக முக்கியமான கேள்வியாகும்.

நாட்டில் எது முக்கியம் என்று கருதப்பட்டு முக்கியமான விஷயங்கள் நமது கவனத்தைக் கவர்கின்றனவா? அல்லது திசை திருப்பும் உப்புப்பெறாத விஷயங்கள் நம் கவனத்தைக் கவர்கின்றனவா என்று எண்ணிப்பாருங்கள்.

மனிதனது பலவீனமான குணங்கள் தான் அவனது முன்னேற்றத்தைத் தடை செய்கின்றது என்று மனோதத்துவ நிபுணர்கள் கூறுகின்றார்கள். காரியங்களை ஒத்திப்போடுதல், பிரச்சனை இல்லை என்று வாதித்தல் (நெருப்புக் கோழி பூமிக்குள் தலையைப் புதைத்துக் கொள்வதைப் போல), முக்கியமில்லாத விஷயங்களில் காலத்தைச் செலுத்துதல், தெளிவின்மை, குழப்பம், சந்தேகம் என்று பலவீனங்கள் தனிமனித வாழ்வைச் சிதைக்கின்றன.



''தனித்தன்மை நமக்கு வேண்டும்''. அதுதான் ஆக்கசக்திக்கு வழி என்று மனோதத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள். தனிமனிதனைப் பார்த்து, ''அடுத்த வீட்டு அண்ணாசாமியுடன் உன்னை ஒப்பிட்டுக் கொள்ளாதே, நீ நீயாகச் செயல்படு!'' என்று மன சிகிச்சை நிபுணர்கள் கூறுவார்கள். அடுத்த வீட்டு அம்புயம் செய்வது போல் நம்வீட்டு நாச்சியும் எல்லாக் காரியங்களையும் செய்தால் நம்வீட்டில் பிரளயம் நிகழும்.

இன்றைய நிலையில் பொருளாதார வளம் என்ற ஒன்று மட்டும் தான் நமது நாட்டு லட்சியமாய் இருக்க வேண்டும். பொருளாதார வளத்தைப் பெருக்க, வறுமையை ஒழிக்க, எல்லோருக்கும் வேலை வாய்ப்பைப் பெருக்க தொழிலபிவிருத்தி ஒன்றுதான் உதவும். சிறு தொழில், கைத்தொழில், பெருந்தொழில் வாயிலாகப் புதிய பொருளை உற்பத்தி செய்ய வேண்டும்.

ஏராளமான பொருட்களை உற்பத்தி செய்யும் போது நமக்கு வரும் சராசரி பங்கு அதிகமாகும். வாழ்க்கை வசதிகள் மிகும். செல்வம் புரளும் போது மனிதன் அதிக சந்தோசத்துடன் வாழ்வான்; அதிக சுதந்திரத்துடன் வாழ்வான்.

காலந்தாழ்த்துமுன் நாம் தொழில், தொழில் என்று தொழிலை – விவசாயத்தை, வருமானத்தை, அதிகப்படுத்த வேண்டும்.

பொருளாதாரத்திற்கு அடுத்தபடியாக நம் கவனத்தைக் கவர வேண்டிய விஷயம் நம் திறமையை நாம் பூரணமாக நாட்டின் நன்மைக்கு உபயோகிக்கிறோமா என்பது தான்.

ஒரு நாட்டின் சொத்து அதன் நீர்வளம், நிலவளம், கனிவளமல்ல; அதன் சொத்து அதன் மக்கள் தான்; அறிவும் திறமையுந்தான், மக்கள் மனவளம் தான்!

மனிதன் புத்திசாலியாக இருக்கும் போது அவன் எந்தப் பிரச்சனைக்கும் வழி கண்டுபிடித்து விடுவான். நம்மிடமோ ஏராளமான புத்திசாலிகள்; நிறைய புத்திசாலிகள்.

ஆனால் உபயோகித்தால் தானே பலன்பெற முடியும்? அதே போலப் புத்திசாலிகளும் ஈடுபட்டால் தானே சமுதாயத்தில் அவர்களது முத்திரை விழும்? நாடு முன்னேறும்.

திறமை வளர – திறமை வெளிவர – திறமைக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும், திறமையை உபயோகிக்க வேண்டும். நம் நாட்டில் திறமையை மதிக்கிறோமா என்று சிந்தித்துப் பாருங்கள்.

அரசாங்கச் சம்பளத்தை நம்பி வாழும் மக்களால் – உற்பத்தி **செய்யாதவர்களால்** நம்நாடு நிறைந்துவிடும். யாராவது பொருளுற்பத்தி செய்தால்தான் அரசாங்கம் செலவழிக்க முடியும். ஆகவே அரசாங்க செலவினங்களைக் குறைத்துப் பொருளுற்பத்தி செய்பவர்களை அதிகப்படுத்த வேண்டும்.

விவசாயக் கண்டுபிடிப்புகள் விவசாயப் பல்கலைக் கழகங்களிலிருந்து விரைவில் விவசாயிக்கு நேரடியாகப் பயன்பெற வேண்டும்.

மாற்று எரிபொருள், உயிரியல் ஆராய்ச்சி, எலக்ரோனிக் என்று உலகில் வேகமாக வளரும் விஞ்ஞானத்துறைகளுக்காக நம் நாட்டின் விஞ்ஞானிகளும், ஆராய்ச்சிகளும் ஊக்குவிக்கப்பட வேண்டும். ஆராய்ச்சி நிலையங்கள் தொடங்கப்பட வேண்டும்; அப்படித்தான் ஜப்பானில் செய்கிறார்கள்.

தொழிலபிவிருத்தி, நிர்வாகம் என்ற இவற்றிற்கு அடுத்தபடியாக நமது கல்வி சீரமைக்கப்பட வேண்டும். அதற்கு நாம் என்னென்ன செய்ய வேண்டும் என்பதைக் கண்டறிய வேண்டும்.

தமிழ்ச் சமுதாயம் ஒரு நல்ல சமுதாயமாக, வளம் மிகுந்த சமுதாயமாக விளங்க முடியும்.

பயத்தை உதறுங்கள்
அவநம்பிக்கையைத் தூர எறியுங்கள்
லட்சியக் கனவை கண்முன் நிறுத்துங்கள்
செயல்படுவோம், நம்மால் முடியும்.

இனி அடுத்து வரவேண்டிய புரட்சி, மக்களின் மனோபாவத்தில் வரவேண்டிய ஒன்று. ஆனால் தமிழ்நாட்டில் மக்களின் மனோபாவம் கண்டு நான் பலமுறை அதிர்ச்சி அடைந்தேன். ஒரு மக்கள் சமுதாயத்தின் மனோபாவம் இப்படி இருந்தால் அந்த நாடு எப்படி முன்னேறும் என்ற திகிலும், கவலையும் என்னுள் படர்ந்தன. தன்னுடைய சொந்த அலுவல்களுக்கெல்லாம் அரசாங்கத்தையே நம்பி அந்த மக்கள் இருக்கின்றார்கள் என்ற விடயம்தான் என்னை மிகுந்த அதிர்ச்சியடைய வைத்த விடயமாகும்.

எதற்கும் அரசாங்கத்தை எதிர்பார்க்கும் மனோபாவம்! அரசியல் வாதிகள் 'அது தருகிறோம் இது தருகிறோம்' என்று போட்டி போட்டுக் கொண்டு சொல்லிச் சொல்லி ஒரு கையாலாகாத இனத்தை–



பிறர் கையை நோக்கும் ஒரு சமுதாயத்தை - அரசாங்கத்தை நம்பி வாழும் ஒரு மக்கள் சமுதாயம் படைத்து விட்டிருக்கிறார்கள். தமிழ் உலகின் அன்றாட வாழ்வைக் கவனித்தேன். தமிழ் உலகமே அரசை நம்பித்தான் சுற்றிச் சுழலுவது போல் இருக்கிறது.

நியாயமில்லாதவற்றுக்கும், குப்பை விஷயங்களுக்கும், சுயநலத்திற்கும் இப்படி அரசாங்கத்தை மக்கள் எதிர்பார்க்கும் மனோபாவம் இருந்தால் நாடு எப்படி முன்னேறும்? முன்னேற்றத்திற்கான சிந்தனைக்கு எங்கே நேரம் கிடைக்கும்.

சினிமாவிலே சில விடயங்களை எடுத்துப் பாருங்கள். நடைமுறைக்கு சாத்தியப்படாத விடயங்கள்.

யாரை யார் ஏமாற்றுகிறார்கள்? இருப்பவனைத் திட்டினால் இல்லாதவனது நிலை உயர்ந்து விடுமா?

இப்படி இதுபோல் மக்களை நம்பவைத்துச் சமுதாயத்தை உருவாக்கினால் அம்மக்கள் நாளை எங்கே அறிவில், ஆற்றலில், உழைப்பில் நம்பிக்கை வைக்கப் போகிறார்கள்.

மத போதகர்களும், பாடசாலை ஆசிரியர்களும், பத்திரிகாசிரியர்களும், நாடகாசிரியர்களும் தான் நாட்டிற்கு வழிகாட்டும் சிந்தனாவாதிகள்.

மக்கள்முன் இவர்கள் தான் நிலையான குறிக்கோளை, வாழ்வுக்கான வழிவகைகளை, முன்னேற்றத்திற்கான முன்னோடும் கருத்துக்களை வைக்க வேண்டும்.

உழைப்பைப் பற்றியோ, எப்படி ஒவ்வொருவரும் வசதியாய் வாழ வழிகாண வேண்டும் என்றோ, எப்படி எல்லோரும் சுகாதாரமாக வாழலாம் என்பதைப் பற்றியோ, நாடு தொழில்மயமாக வேண்டியதன் அவசியத்தைப் பற்றியோ யாரும் பேசுவதாகப்படவில்லை.

நாட்டுக்கு வேண்டுவது. நெல் விளைவிப்பதைப் போல, புதிய பொருள், புதிய அறுவடை, நமக்குத் தேவைப்படும் பொருட்களையும் பிறநாடுகளுக்குத் தேவைப்படும் பொருட்களையும் நாம் உற்பத்தி செய்தாலல்லவா, நமது ஊரில் புதுப்பணம் புரளும், வசதி வளரும், வாழ்க்கை முன்னேறும்.

ஒரு நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் சிந்தனாவாதிகள் மூன்று பேர்.

முதலாமவர் மதபோதகர், இரண்டாமவர் பள்ளி ஆசிரியர்கள், மூன்றாமவர் பத்திரிகாசிரியர்கள்.

இவர்கள் தான் ஒரு நாட்டின் ஜீவநாடி ஒரு கருத்து மக்கள் மனத்தில் புகவேண்டுமானால் இவர்கள் மூலம் தான் புகவேண்டும். மக்கள் மனத்தில் ஒரு கருத்தைப் பதித்து அச் சமூதாயத்தை எந்தப் பக்கம் அழைத்துச் செல்லவேண்டுமோ அந்தப் பக்கம் அதைத் திருப் பிச் செல்லும் சிந்தனையும், அதற்கேற்ற வாய்ப்பையும் பெற்றவர் கள் இவர்கள்.

சமயத்தைப் பார்ப்போமானால் சமுதாயத்தில் இன்று சமயத் தின் பிறப்பு இருக்கிறது. ஆனால் பிரசாரகர்களின் பிடிப்பு ஒன்றும் அதிகமாயில்லை. நிலைமை அப்படி.

பள்ளி ஆசிரியர்கள் விதைக்கும் கருத்து முளைத்து வெளிவரப் பத்தாண்டு காலமும் சில சமயம் ஒரு தலைமுறையும் ஆகலாம்.

ஆனால் பத்திரிகாசிரியர்களது செல்வாக்கு பத்து ஆண்டு காலமோ அல்லது ஒரு தலைமுறை வரையிலுமோ காத்திருப்பது அல்ல. காற்று வீசும் அந்த அளவு வேகத்துடன் அவர்கள் தங்கள் கருத்துக்களைப் பரப்ப முடியும்.

கடந்த ஆண்டுகளில் நாட்டை உயரத் தூக்கிச் செல்வதில் பத்திரிகைகள் என்ன செய்தன. தமிழனின் வாழ்வை, தொழில் வளத்தை, சுயகௌரவத்தை உழைப்பை எவ்வாறு மேம்படுத்தின, இன்றைய தமிழனின் மனோபாவத்தை எப்படிக் கஷ்டப்பட்டு உரு வாக்கின சிந்தித்துப் பாருங்கள்.

ஒரு தொழில் அடிப்படை இல்லாது புகைந்து போய்க்கொண் டிருக்கும் ஓர் ஊரில் லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவில் வீட மைப்புத் திட்டம் ஒன்றை உருவாக்கி வீட்டைக் கட்டிப் போட்டால் அவ் ஊரவர்கள் வீட்டை வைத்துக் கொண்டு என்ன செய்வார்கள். ஒரு தொழிலை அரசாங்கம் அங்கே தொடங்கியிருந்தால் அதில் நூற் றுக் கணக்கான ஏழைகளுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் அப்போது அவர்கள் தமக்குத் தேவையான புதிய வீட்டைக் கட்டிக் கொள்வார் கள். புதுப்பணம் புரளும். வாழ்வு வளமடையும். ஒரு நாடு எப் படிப் பொருளாதார வளம் பெறுகிறது என்ற அடிப்படை அறிவைப் பயன் படுத்த வேண்டும்.

நமது நாடு இல்லாத நாடுதான் எனினும் இலவசப் பாட சாலை, மருத்துவமனை, குடியிருப்பும் — அதற்கு அவனே தி வைத்து விட்டால் மீண்டும் கட்டிக் கொள்ளப் பணமும் ... என்று கொடுத்து நமது பரிதாபத்தில் ஏழை மனிதனின் காலை ஒடித்து விட்டோமோ என்று தான் கவலைப்பட வேண்டியதாயிருக்கிறது.



ஏழையை தானே நிற்க முடியாதவனாக்கி விட்டோமோ என்று சந் தேகமும் எழுகின்றது. எம்.ஜி ஆரின் ஆட்சியில் இனாமாக உணவு துணிமணி, குடம், செருப்பு, பல்பொடி என்று கொடுப்பதைக் கண் டேன். அவர்கள் காலை ஒடித்தார்கள். இவர்கள் காலை ஒடித்து கையில் திருவோட்டைக் கொடுத்திருக்கிறார்கள்.

ஓர் அமெரிக்கனிடம் இனாமாக ஒரு பரிசைக் கொடுத்தால் அவன் வாங்கிக் கொள்ள மாட்டான் கடைசியில் வலுக்கட்டாயப் படுத்தி வாங்கிக் கொள்ள வைத்தோமானால் ''இதற்குப் பதில் உனக்கு நான் ஏதாவது செய்து விடுகிறேன்!" என்பான். ஏனெனில் 'பொருள்களைப் பிறரிடமிருந்து இனாமாக வாங்கிக் கொள்வது கேவலம்" என்பது அவர்கள் மரபு. அது அவனது சுய கௌரவத் தின் மண்டையில் அடிப்பதைப் போல் அவன் நினைக்கிறான். அப் படி அவன் வளர்க்கப்பட்டிருக்கிறான்.

நம்மிடையே இனாமாக மற்றவன் தரமாட்டானா என்ற மனோபாவம் ஒட்டி ஊறிப்போய் இருக்கிறது.

''இருப்பவன் தானே, கொடுத்தால் என்ன?' என்கிறார்கள் இன்னும் ஒரு படி மேலே போய், ''இருப்பவன் ஏன் கொடுக்க மாட்டேன் என்கிறான்? என்று கோபப்படுகிறார்கள்.

வறுமை, மக்கள் தொகைப் பெருக்கம், எல்லைகளில் தொல்லை குறைந்த விவசாய அறுவடை. சுகாதாரமின்மை இவை அனைத்தை யும் செயல் மூலம் மாற்றிவிடலாம். சட்டம் போட்டு மாற்றி விட லாம். பணத்தைக் கொண்டு செய்து விடலாம்.

ஆனால் ஒரு நாடும் அதன் மக்களும் எண்ணங்களில் நோயுற்று சிந்தனையில் சிக்குப்பிடித்து வாழ்ந்தார்களானால் எப்படி.

கடந்த நாற்பதாண்டுகளாக சம உணவைப் பற்றியும் போசாக்கான ஆகாரத்தைப் பற்றியும் பள்ளிகளில் போதித்து வரு கின்றனர். சம உணவு என்பது என்ன? உணவில் எவ்வளவு புரதம் இருக்க வேண்டும், தாதுப்பொருள் காய்கறிகள் இருக்க வேண்டும் என்றெல்லாம் தெளிவாகப் படித்திருக்கிறோம், அது பற்றி நம்மால் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியும். பரீட்சை எழுதித் தேற முடியும். ஆனால் சாப்பிடும் வேளை வந்து விட்டால் சம உணவுக் கும் சமயலறைக்கும் நமது படிப்பிற்கும் நமது நடைமுறைக்கும் சம் பந்தமிருப்பதில்லை. ருசியாய்ச் சாப்பிடுகிறோம்? அவ்வளவுதான்.

உணவில் போதுமான புரதம் இல்லாவிட்டால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி நிரந்தரமாகப் பாதிக்கப்படுகிறது என்று விஞ்ஞானிகள் நிரூபித்திருக்கிறார்கள் ஆனால் நமது உணவில் முக்கிய அங்கம் வகிப்பதோ வயிற்றை நிரப்புவதோ வெறும் மாப்பொருள்தான்.

அமெரிக்காவில் விற்கப்படும் அரிசியில் கூட இரும்புச் சத்தை ஏற்றி மக்களுக்கு போஷாக்கு அளிக்கும் வகையில் விற்கிறார்கள். ஓர் அமெரிக்க வீட்டில் சைவ உணவுக் காரர்களான நாம் விருந்துக்குப் போய்விட்டால் ''எப்படி உனக்கு வெறும் அரிசிச் சாதத்தையும் வெந்த காய்கறிகளையும் வழங்குவேன்? உன் புரதத் தேவைக்கு நான் எப்படி ஈடுகட்டுவேன்? ''என்று துடித்துப் போவார். அவ் வீட்டுத் தலைவி மக்கள் அவ்வளவு தூரம் 'சம உணவு பற்றிய உணர்வுடன் வாழ்கிறார்கள்

''சம உணவு" நமது வீட்டுப் பிரச்சினை உண்மையிலேயே பெரிய நாட்டுப் பிரச்சினையும் கூட. நாடும், அரசும், தலைவர்களும மக்களிடையே உணவு பற்றிய ஓர் உணர்வை ஏற்படுத்த வேண்டும். உணவு சமைக்கு முன் பெண்களும் உணவுப்பண்டங்களை வாங்கு முன் சம்பாதிப்பவர்களும் போஷாக்குக் கண்ணோட்டத்துடன் பொருள்களை மதிப்பிடும் மனோபாவத்தை நாம் உருவாக்க வேண்டும்.

அடுத்து எமது நாட்டிலே கல்வியின் மூலம் எந்த அளவிற்கு பயன் கிட்டியுள்ளது என்பதைச் சிந்திக்க வேண்டும். இன்று படித்து அடுத்த தலைமுறையில் மனிதனாக வரப்போகும் நமது இளைஞர் சமுதாயத்தின் விதியை நாம் பாழ்படுத்திக் கொண்டிருக்கிறோம். அவர்களது எதிர்காலத்தில் நமக்குப் பொறுப்பு உண்டு. நமது மாணவர்களது நாளைய எதிர்காலம் நாம் இன்று கொடுக்கும் கல்வியால் எவ்வாறு அமையப் போகிறது என்பதை சிந்திக்க வேண்டும்.

கடந்த 20 ஆண்டுகளில் ஜப்பானிலும், ஜெர்மனியிலும் என்ன நடந்தது? ஏன் நாம் அது போல் தொழில் துறையில், விஞ்ஞான வளர்ச்சியில் கற்பனை மிகுந்தவர்களை, துணிவு நிறைந்தவர்களை உண்டாக்க முடியவில்லை. மனித மூளையில் ஆரம்பம் முதற்கொண்டே எண்ண அமைப்புக்களை உருவாக்கும் நமது கல்வி முறை சீர் கெட்டுப் போயிருக்கிறது என்பது விளங்கும்.

அமெரிக்காவும் ஒரு காலத்தில் விவசாய நாடாகத்தான் இருந்தது. அப்போது கல்லூரிகள் எல்லாம் அரசாங்க உதவியுடன் விவசாயக் கல்லூரிகளாகத்தான் திறக்கப்பட்டன. உயர்நிலைப் பள்ளிகளில் இன்றும் விவசாயம் ஒரு பாடமாகப் போதிக்கப்படுகிறது.



நாமோ விவசாயம் படிப்பதற்குப் பதில் தத்துவம் படிக்கிறோம், தமிழ்க் கவிதை படிக்கிறோம்.

*1957*ல் ரஷ்யா முதல் ஸ்புட்னிக்கை வானில் விட்டவுடன் உலகம் அதைப் பெருஞ் சாதனையாகப் போற்றியது. ஆனால் அமெரிக்காவிலோ, பட்டி தொட்டிகளில் படித்தவர்கள், ஆசிரியர்கள் அரசியல் வாதிகள் எல்லாம் ஒரே கேள்வியைத்தான் கேட்டார்கள். ''ஏன் நாம் தோற்று விட்டோம்.'' ஏன் நாம் வானவெளி ஆராய்ச்சியில் முந்தவில்லை; ஏற்பட்ட தவறு நமது கல்வி முறையில் தான் என்றார்கள்.

தொடர்ந்து கல்வியில் ஒரு புரட்சியே நடந்தது. ஆரம்பப் பள்ளிகளின் பாடத்திட்டங்கள் மாற்றப்பட்டன. கணிதத்தில் எங்கும் அதிக கவனம் செலுத்தினர். பத்தாண்டுகளுக்குள் சந்திரனில் காலை வைத்த முதல் மனிதன் அமெரிக்கனாக மாறிய கதை அனைவரும் அறிந்ததே.

நமது நாட்டிலே பெரும் பணத்தைச் செலவிட்டு அரசு இலவசக் கல்வியை வழங்குகின்றது. இவ்வளவு பணத்தைக் கொட்டி மாணவர்களுக்கு இவ்வளவு செலவில் அறிவைப் போதிக்கிறார்களே அவர்களால் சமுதாயத்துக்கு என்ன நன்மை ஏற்பட்டிருக்கிறது. எப்படித் தொழில் மேம்பட்டிருக்கிறது. எப்படி வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது என்று ஒப்பிட்டுப்பாருங்கள். இதை விடக் குறைந்த செலவில் அதிக பயனைப் பெற்றார்கள் ஜப்பானியர்கள்.

கல்வியை நாம் ஒரு சடங்காக ஆக்கிவிட்டோம். படிக்க வேண்டியது ஒரு நெறி முறை என்று ஒரு கோவில் அர்ச்சனையைப் போல ஆக்கிவிட்டோம். அங்கே ஆண்டவன் இல்லை; உயிரில்லை. நாமும் அதிகம் சிந்திக்காமல் பணத்தைக் கொட்டி வருகிறோம். பணத்தை இப்படி வாரி விடும்போது அமெரிக்கா போன்ற நாடுகளில் என்றால் அந்த நிலையில் உள்ளவர்களைப் பார்த்து ''எங்கே ஐயா பலன்! என்று கண்ணில் விரலை விட்டு ஆட்டிக் கேட்பார்கள்.

நமது மாணவர்களுக்கு என்ன பாடம் சொல்லிக் கொடுக்கிறோம்? அவன் மன வளர்ச்சிக்கான கல்வியை நாம் அவனுக்குத் தருவதில்லை. அவனது தன்னம்பிக்கையை, தைரியத்தை முடிவெடுக்கும் திறனை வளர்க்கும் கல்வியை நாம் சொல்லிக் கொடுக்கவில்லை. அவன் வளர்ச்சிக்கு எது வேண்டும் என்பதை நாமாக கற்பனை செய்து, வரையறுத்து அவன் மீது பாடத்திட்டம் என்ற பளுவை ஏற்றிவைக்கிறோம்.

உதாரணமாக இரசாயனம் படிக்கும் மாணவனுக்கு நாடகத்தில் ஆர்வம் இருந்ததென்றாலோ மனோதத்துவத்தில் ஆர்வம் இருந்ததென்றாலோ அவன் அந்த வகுப்புகளில் போய் அமர்ந்து தன் அறிவை விரிவுபடுத்திக் கொள்ள முடியாது. தன் அறிவுத் தாகத்தைத் தணித்துக் கொள்ள முடியாது. மேலை நாடுகளில் மாணவர்கள் போகப் போகத் தங்கள் திறமையை ஆர்வத்தைத் தாமே கண்டு அதில் இறங்குகிறார்கள். நமது கல்வி நிலையில் அதற்கு வழியே இல்லை. செக்கு மாடு போல அவன் எடுத்துக் கொண்ட பாடத்திட்டத்தை அவன் சுற்றி வர வேண்டும். வேறு பாடத்தில் ஆர்வம் என்றால் மற்றொரு முறை மூன்றாண்டுக் காலம் அவன் செக்கு சுற்ற வேண்டும்.

யாருக்காகப் பாடம்? யாருக்காக அறிவு? நமக்குச் சடங்கு தான் முக்கியம். அறிவு பெறுவது இரண்டாம் பட்சம். அப்படி இருக்கிறது நமது கதை.

நமது பாடத்திட்டங்களை – அசைக்க முடியாத இரும்பினாலான சிறைக்கம்பிகளை – பல்கலைக்கழகத்தின் தலைமைப் பீடத்தில் உள்ள சில வயோதிபர்கள் தீர்மானிக்கிறார்கள். அவர்கள் முப்பது ஆண்டுகளுக்கு முன் என்ன படித்தார்கள் என்ற எண்ணத்தில் பாடத் திட்டங்களை அமைத்து விடுவதாகவே புலப்படுகிறது. வெளி உலகின் நடப்பை என்ன என்று அதிகம் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை

அவர்கள் தீட்டிய பாடத்திட்டத்தைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மற்றப் பல கல்லூரிகளும் செயல் படுத்துகின்றன.

பாடத்தைச் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியருக்கு மாணவனுடன் ஏதும் சம்பந்தமில்லை. இவர் தனக்குத் தெரிந்ததை அதிகமாகச் சொல்லிக் கொடுப்பதனால் மாணவனுக்கு ஏதும் தேர்வில் பலன் ஏற்படப் போவதில்லை.

தன்னிடம் பாடம் கற்கும் மாணவனது அறிவு வளர்ச்சியை மதிப்பிடும் வாய்ப்பும் இவருக்கு இல்லை. யாரோ பாடத்திட்டத்தை அமைக்க யாரோ கேள்வித் தாள்களைக் குறிக்க, யாரோ திருத்தி அதை மதிப்பிட யாரோ சொல்லிக் கொடுக்கிறார்கள்.

அமெரிக்காவிலும், ஜெர்மனியிலும், ஜப்பானிலும் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர் மாணவனின் வளர்ச்சியை மதிப்பிடுகிறார்.

அமெரிக்காவில் ஒவ்வொரு கல்லூரிக்கும் தனித்தியங்கும் உரிமை உண்டு. கல்லூரித் தலைவர்களே அவர்களுக்குப் பிடித்த பாடத்திட்டத்தை அமைப்பார்கள். அந்தந்த ஆசிரியர்களே அவர்களது மாணவர்களை மதிப்பிடுவார்கள். அவர்களே பட்டம் வழங்குவார்கள். மூன்றாண்டுக்கு ஒரு முறை ஒரு நிபுணர் குழு வரும். சம்பந்தப்பட்ட கல்லூரியின் பாடத்திட்டம் பயிற்சி முறை ஆசிரியர்களின் திறன் ஆகியவை பற்றியும், கல்லூரி நிர்வாகம் பற்றியும் மாணவர்களின் குறைகள் பற்றியும் அந்த நிபுணர் குழு ஆராய்ந்து கல்லூரி தொடர்ந்து நடக்க அனுமதிக்கும் அல்லது மறுக்கும்.



கல்லூரிகள் அங்கெல்லாம் தனித்து இயங்குவதனால் மாணவனுக்குப் புதிய புதிய முறைகளில், புது உத்திகளை உபயோகித்து, நல்லவிதமான கல்வியை சிறப்பான முறையில் அளிப்பதில் ஒரு போட்டி மனப்பான்மையை உருவாக்கியிருக்கிறார்கள். அந்தக் கல்வியும் மனிதத் தன்மை வாய்ந்ததாய் இருக்கின்றது.

பாடத்திட்டங்களின் மூலம் நாம் எப்படிப்பட்ட மாணவனை உருவாக்க விரும்புகிறோம்? நமது குறிக்கோளெல்லாம் நல்ல ஞாபக சக்தியுள்ளவனை - நினைவாற்றல் உள்ளவனை உருவாக்குவதாகவே இருக்கின்றது. நமது கல்வி அமைப்பில் மாணவனது சிந்திக்கும் திறமையை, பிரச்சினைகளைத் தீர்க்கும் திறமையை நாம் வளர்ப்பதில்லை. நமது ஊரில் நெட்டுருப்போட்டு நினைவு வைத்துக் கொண்ட ஒரு மாணவன் சிறந்த மாணவனாக – முதல் மாணவனாக வரமுடியும்.

ஏன்?

நமது கல்வி எல்லாம் 'நீ இவ்வளவு விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்' என்ற பொதியில், சுமையில், பாடப்புத்தக எடையில் தான் குறியாயிருக்கிறதே தவிர ''இதோ பாடம், பார், எப்படிச் சிந்தித்து இதை உருவாக்கியிருக்கிறார்கள்? பிற சூழ்நிலையில் இந்த அறிவைக் கொண்டு நீ எப்படி நடந்து கொள்வாய்?'' என்று மாணவனது சிந்திக்கும் சக்தியையோ, மாணவனது ஆரோக்கியமான மனோபாவத்தையோ வளர்ப்பதாயில்லை. 'கேள்வி — பதில்' இதுதான் கல்வி. பதிலும் முன்பே சொல்லிக் கொடுக்கப்படும். மாணவனின் பொறுப்பு அதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது அவ்வளவு தான்.

தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் எத்தனையோ புத்தகங்களில் இருக்கின்றன. அவன் ஏன் மூளையில் சுமக்க வேண்டும்? அமெரிக்காவிலே மாணவனுக்குச் சிந்திக்கும் திறமையை வளர்க்க விரும்புகிறார்கள். அந்த மனப்போக்கில் கல்விகற்றுக் கொடுக்கிறார்கள். ஆக்கசக்தி படைத்த மனத்திறனை (*Creative thinking*) வளர்க்கும் கல்வி அங்கு போதிக்கப்படுகிறது.

நெட்டுரு முறையில் தேறிவந்த நமது மாணவர்கள் எத்தனை பேர் இந்தச் சிந்திக்கும் முறையைச் சமாளிக்க முடியாதவர்களாகி அமெரிக்காவில் டாக்டர் பட்டம் வாங்க முடியாதவர்களாக வெளி யேற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

அமெரிக்க பொறியியல் பேராசிரியர் ஒருவர் கோடை விடுமுறை யில் ஆசிரியர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க இந்தியா வந்திருந் தார். அவர் கூறினார் ஆசிரியப் பயிற்சியின் போது வகுப்பில் சொல் லிக் கொடுத்த கணக்கையே திருப்பிக் கேட்டால் போட்டு விடுகிறார் கள். அதில் சில விஷயங்களை மாற்றி அவர்களைச் சிந்திக்க வைக்கு மாறு கணக்கை அமைத்தோமானால் அவர்களால் போடமுடிவதில்லை என்றார். இவர்கள் பொறியியல் ஆசிரியர்கள். இவர்கள் உருவாக்கும் மாணவர்கள் எப்படி இருப்பார்கள்.

இப்படிச் சுயமாகச் சிந்திக்க முடியாத தொழில்துறை மாணவர் களை நாம் உருவாக்கினால், எப்படிப் புதிய முறையில் சிந்தித்துப் புதுப் பொருள்களை கண்டுபிடிப்பார்கள் அவர்கள்.

இதுதான் நம்நிலை. இதில் ஆசிரியர்களைக் குற்றஞ்சாட்ட முடி யாது. மாணவர்களைக் குற்றஞ்சாட்ட முடியாது. நமது கல்வி முறை யைத்தான் குற்றஞ்சாட்ட வேண்டும்.

பல்கலைக்கழகம் என்பது அறிஞர் கூடி – சிந்தனையாளர் கூடி விவாதிக்கும் இடம் என்று சொல்வார்கள். இன்று நாம் அதைப் பெரும்பாலும் புத்தகங்களின் மறுபதிப்புகள் ஒன்றுகூடும் இடங்களாக ஆக்கி வந்திருக்கிறோம்.

அடுத்து நமது ஊரில் படித்துவிட்டு கல்லூரியிலிருந்து வெளிவரும் மாணவன், தான் ஏதோ சமூகத்திற்கு அப்பாற்பட்ட மனிதனாய்த் தன்னை நினைக்கிறான். ஏதோ நகத்தில் அழுக்குப்படாத வேலை கொடுக்க, ஊதியம் கொடுக்க – சமுதாயம் கடன்பட்டிருக்கிறது என்று எண்ணுகிறான்.

இதன் மூலம் துரதிஷ்டவசமாக சமுதாயத்தின் கீழ்நிலையில் வாழும் மக்களின்நிலை மேலும் கீழே போகிறது. படிப்பும் அறிவும் கீழ்மட்டத்தில் ஊடுருவிப் பயனளிக்கும் வாய்ப்பில்லாமல் போய்விடுகி றது. மாணவன் பொதுவாழ்க்கையில் தான் ஓர் அங்கம் என்பதை உணர வேண்டும்.

ஓராண்டு பொதுநலசேவை என்று கிராமத்திலோ, சேரியிலோ ஒரு திட்டத்தில் அவனை ஈடுபடுத்தினால் இருவரும் முன்னேறுவார்கள். மற்ற மூன்றாண்டுகளில் பாடம் கற்றுக் கொடுத்துப் பட்டம் வழங்கலாம்.



வெறுங்கல்வியைச் சடங்காகப் பரப்புவதில் நாளை வேலையில் லாத் திண்டாட்டம்தான் பெருகும். கல்வியின் மூலம் அவர்கள் தங்கள் எதிர்காலத்திற்கான ஒரு முடிவை அவர்களே எடுக்க உதவுவோமே யானால் அக்கல்வி நாட்டிற்குப் பலன்தரும்.

நாம் போகவேண்டிய தூரமோ வெகு தொலைவு. நாமோ இன்னும் புறப்பட ஆயத்தம் கூடச் செய்யக்காணோம்.

சுயமுயற்சியால், தணியாத லட்சியத்தால் ஒருவன் அரசியலிலோ, கல்வியிலோ, தொழிலிலோ தலைவனானால் அவனைச் சுற்றி ஒரு கும்பல் உருவாகிறது. கொள்கைச் சித்தர்களைச் சபலசித்தர்களாகச் செய்யும் வலிமையும், நோக்கமும் கொண்ட கும்பல் இது. மனிதனது பலவீனங்களே இக்கும்பலின் கருவி.

இக்கும்பலின் தன்மையை உணர்ந்து இதற்குமேல் உயர்ந்து நிற்கும் தலைவர்கள் அபூர்வம். இப்படிப் பாராட்டுரைகளையும், புகழ்மொழிகளையும் கேட்டு பலநாட்டுத் தலைவர்கள் நாட்டின் நாடி யைத் தவறவிட்டிருக்கிறார்கள். பாராட்டை நிஜமென நம்பி ஆடை யற்ற அரசன் போல் ஆகி இருக்கிறார்கள்.

நாம் மனிதர்களையும், அவர்களது கொள்கைகளையும், திட்டங் களையும் தனித்தனியே பிரித்துப்பார்க்க முடியாதவர்கள். மனிதன் நல்லவனாக இருந்து விட்டால் அவனது கொள்கைகளும் திட்டங்களும் சிறந்தவையாயிருக்கும் என்று எண்ணிவிடுகிறோம். நாம் உணர்ச்சிவசப் பட்டவர்கள்; அறிவுவசப்பட்டவர்களல்ல. நாம் உணர்ச்சியைப் போற்று கின்றோம். பகுத்தறிவை அல்ல. நமது பரம்பரை அது.

உணர்ச்சி காரணமாக நாம் நம் தலைவர்களைக் கண்ணை மூடிக்கொண்டு புகழ்கிறோம். உணர்ச்சி காரணமாக மாற்றானைக் கண்ணை மூடிக்கொண்டு இகழ்கிறோம்.

புகழ்பெற்ற பாடலொன்று,
''போனால் போகட்டும் போடா''

ஓர் ஆயிரம்பேரை நிறுத்திவைத்து இதை யார்? எந்தக்கட்டத் தில்? எந்தச் சினிமாவில் பாடுகிறார் என்று கேட்டுப்பாருங்கள். பல ருக்கு அந்தக்கதை மறந்து போயிருக்கும். எது மிஞ்சியிருக்கிறது? அந்தப் பாடல் – அந்த எண்ணம்.

அமெரிக்காவில் இரண்டாவது வகுப்புப் புத்தகத்தில் எழுதி யிருக்கிறது.

''ஒரு காலத்தில் கப்பலும், காரும், விமானமும் வெறும் எண் ணங்களாகத்தான் இருந்தன. மனிதன் தன் செயல்திறனால் அவற்றை உருவாக்கினான்'' என்று.

கல்வியைப்பற்றி எழுதினோம்; என்ன ஆயிற்று. அரசியல் விழிப்பைப்பற்றி எழுதினோம். என்ன ஆயிற்று? கிராம வளர்ச்சி, நமது அரசியல்வாதிகளின் போக்கு, சமுதாய மனோபாவம் என்று எல்லாவற்றையும் கவலையோடு, அக்கறையோடு, நல்லெண்ணத்தோடு ஏதாவது நன்மை விளையாதா, நல்லோர் மனதில் பதியாதா என்ற ஆதங்கத்தோடு நிறைய எழுதியாயிற்று. என்ன ஆயிற்று.

'யாருக்கு ஐயா அக்கறை என்ற ரீதியில் நாடு ஓடுகிறது. நடைமுறை உலகம் வேறு' என்று அரசியல்வாதிகள் நம்மைக்கண்டு நகைக்கும் மனோபாவம் தெரிகிறது. படித்தவர்களையும், இளைஞர்களையும், அனுபவசாலிகளையும், பல்கலைக்கழக பேராசிரியர்களையும் புறக்கணிக்கும் போக்கு, அவர்களைப் பயன்படுத்தாத போக்கு நாட்டின் சாபமாக முன்னிற்கிறது. அறிவும் திறமையும் கொண்ட இளைஞர் கூட்டத்திற்கு வேலை, தொழில் சமுதாயத்திற்குப் பயன்படும் சந்தர்ப்பம் உருவாக்கப்படாமல், வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தேக்கி வைத்திருக்கிறோம்.

பலருக்கும் பதவி பெரிதாகப்படுகிறதே ஒழிய கொள்கை பெரிதாகப்படுவதில்லை. பலருக்கும் தங்களுக்கு வேண்டிய சகாயங்கள் முக்கியமாகப்படுகின்றனவே தவிர நாட்டுநலன் பெரிதாகப்படுவதில்லை. எல்லாவற்றையும் உணரும் பலருக்குச் சோற்றுப்பாடு பெரிதாக இருக்கிறது. தைரியம் இருப்பதில்லை.

இயந்திரத் தொழிற்சாலை போலப் பட்டதாரிகளை உருவாக்குகிறோமே, வெறும் கிளிப்பிள்ளை போல நெட்டுருப் போட்டுப் பரீட்சைகளில் மாணவர்களைத் தேறும்படி செய்கின்றோமே, அவன் அன்றாட வாழ்க்கைக்கும் சம்பாத்தியத்திற்கும் ஏற்ற ஒரு பயனுள்ள கல்வியை, தன் காலிலே தான் நிற்கும் ஒரு தன்னம்பிக்கை நிறைந்த சூழ்நிலையை உருவாக்குகிறோமா என்று எண்ணிப்பார்க்கிறார்களா...?

கலையையும், இசையையும் காரணமில்லாமல் லெனினும், கம்யூனிசமும் திட்டவில்லை. மனித வாழ்க்கையின் அடிப்படை பூர்த்தி செய்யப்படாத நிலையில், மானத்தை மறைக்கக் கந்தல் துணிக்கு வழியில்லாது மனிதர் உலவும்போது, ஒருவேளை உணவுக்கு வழியின்றி எலும்பும் தோலுமாகப் பிச்சைக்காரன் எதிரே வரும்போது எப்படிப் போய் நாம் நாட்டியத்தை ரசிக்க முடியும்? எப்படிப்போய் இசையை ரசிக்க முடியும். உங்களை அந்த நிலையில் வைத்துச் சிறிது கற்பனை செய்து பாருங்கள். 'தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்' என்றார் பாரதி.



ஆனால் நாடோ ஒரு சகதியை விரும்பும் எருமைமாடு போல் அசைபோட்டு நகருகிறது.

ஏன் சமுதாயம் மாறவில்லை...... ஏன்? ஏன்?

எண்ணங்களில் தூய்மை இல்லாதபோது நாம் உண்மையை அடிமனதில் மறைத்து மறைத்து வைத்துக் காரியம் செய்கிறோம். தூய்மையற்ற எண்ணம், சுயநலமான எண்ணம் – அதன் பலனைத் தோற்றுவித்துவிடும். சுயநலமான எண்ணம் – ''இன்று இருக்கும் நிலைக்கு ஆபத்து வந்துவிடுமோ'' என்று பயத்தில் முடிகிறது. அந்தப் பயமே அவர்களின் வீழ்ச்சிக்கு வித்தாகிறது. எண்ணங்கள் தனிமனித வாழ்விலும் சரி, நாட்டின் வாழ்விலும் சரி – அதற்கேற்ற பலனைத்தான் கொண்டுவரும். ''கெட்ட எண்ணங்களின் – சுயநலச் சிந்தனைகளின் – பலன் என்ன?'' என்று எண்ணிப்பாருங்கள். எண்ணங்களுக்கேற்பதான் வாழ்க்கை அமைகிறது. ''கெடுவான் கேடு நினைப்பான்'' என்பவை எல்லாம் அடிப்படை மனோதத்துவத்தில் பிறந்த உண்மைகள். ''முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'' என்ற வாசகங்கள் எல்லாம், ஒவ்வொரு காரியங்கள் அதற்கான பலனைக் கொடுக்கும் என்ற காரணகாரியத் தொடர்பு கொண்ட *(Law of Cause and effect)* உலக விதிகள், நியதிகள். இதை யாரும் மாற்றுவதற்கில்லை.

சில தலைவர்களுக்குப் புகழ்தான் குறி. உதாரணமாக எம். ஜி. ஆர். தங்கள் புகழைப் – பெருமையைக் காப்பாற்ற அவர்கள் எதையும் செய்வார்கள். தங்கள் புகழ் மங்காமலிருப்பது தான் அவர்கள் நோக்கம். அதில்தான் கருத்துச் செலுத்துவார்களே தவிர – அதன் மூலம் தான் நாட்டுப் பிரச்சினையைப் பார்ப்பார்களே ஒழிய ஒரு பிரச்சனையால் நாட்டுக்கு நல்லதா கெட்டதா என்று பார்க்க மாட்டார்கள்.

தலைவர்கள் பலவகையினர். அவன் வளர்ந்து வந்த முறையில் என்னென்ன அனுபவங்கள் அவனுக்கேற்பட்டு அவை எந்தவிதமான சிலிர்ப்பை ஏற்படுத்தி அவன் தன்னைக் கலந்து கொள்ளச் செய்ததோ அதைப் பொறுத்தே அவன் மனப்பழக்கம் அமைகிறது. பிரபல அரசியல் அறிஞர் பேபர் இப்படி அபிப்பிராயப்படுகிறார். இது உண்மை.

இன்றைய தலைவன், தனது இளவயதில் பிரச்சனைகளை எப்படிச் சமாளித்து மீண்டானோ, அதைப் போலவே பெரியவனான போதும் செயல்படுவான் என்பது தான் அது.

தலைவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, நல்ல சரித்திர அறிவு பெறவேண்டும். காலம் என்ற பரந்த படுதாவில் தன்னைக் காணக் கற்றுக் கொள்ள வேண்டும். சரித்திரம் என்ற திரையில் தன் பிம்பம் எங்கே இருக்கிறது என்று காண முயலவேண்டும். இல்லாத

போது தனக்கும் நாட்டுக்கும் அழிவைத் தேடிக் கொள்கிறான். அதிகம் சாதிப்பதில்லை.

தலைவனின் எல்லாவித குறைபாடுகளையும், நிறைகளையும் நாடு அனுபவிக்க வேண்டியிருக்கிறது மக்கள் அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

எந்த நாட்டில் படித்தவர்களின் விழிப்பும் அறிஞர்களின் துணிவும் புறக்கணிக்க முடியாத மாபெரும் சக்தியாக உருவெடுக்கிறதோ, வழிகாட்டுகிறதோ, தவறைத் துணிந்துகூறித் திருத்துகிறதோ அப்போது ஜனநாயகமும், தலைவனும் ஒரு நல்ல நாட்டை உருவாக்குகிறார்கள்.

''மனிதனுக்கு மனிதன்தான் எதிரி! மனிதன் தன் கெட்ட சிந்தனைகளாலும் செயல்களாலுமே தன்னை அழித்துக் கொள்கிறான்'' என்று மனோதத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள். நாட்டின் நல்வாழ்விற்கும் நாட்டு மக்களேதான் எதிரிகளாயிருக்கிறார்கள். சர்வாதிகார மனப்பான்மையை வழிபட்டு, போற்றி வளர்ப்பதன் மூலம்; தீமையைத் தீமை என்றுகூற அஞ்சி ஊமையாயிருப்பதன் மூலம்.

நாம் நமக்காகவும் நாளை வரப்போகும் நமது சந்ததியின் நன்மைக்காகவும் நல்ல ஜனநாயக நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். வளர்க்க வேண்டும்.

'மாந்தர் தம் உள்ளத் தனையது உயர்வு' என்றார் வள்ளுவர். மனிதன் தான் கொண்டுள்ள எண்ணங்களுக்கேற்ப உயர்கிறான். நல்லெண்ணங்கள், உழைக்கும் மனோபாவம், எந்த நிலையையும் சமாளிக்கும் தன்னம்பிக்கை, புதிய புதிய சிந்தனைகள், முன்னேறத் துடிக்கும் உள்ளம், வாழ்வில் வளம்பெற விரும்பும் ஆசை, அதற்கேற்ற செயலைத் தொடக்கும் சிந்தனை – இப்படியுள்ள மனிதனை எந்த நாடும், எந்தச் சூழ்நிலையும், எந்தக் கடவுளும் நிறுத்த முடியாது. அவன் தன் வாழ்வில் ஒரு புதிய உலகை நிர்மாணிக்கிறான். அவனைப் போல எண்ணங்கள் அதிகம் நிறைந்த ஒரு சமுதாயம் மலர்கிறது. வசதிகள் கொண்ட நாடாக வாழ்கிறது. வலிமைமிக்க தேசமாக உலக அரங்கில் பவனிவருகிறது.

சமுதாயம் என்பது தனிமனிதர்களாலான கூட்டம். நம்பிக்கையும், முயற்சியுங் கொண்ட தனிமனிதர்களாலான சமுதாயம் பாலைவனத்தைக் கூட பசுஞ்சோலைவனமாக்கி வாழமுடியும் உதாரணம்; அரேபிய மணலில், பொட்டல்வெளியில் குடியேறி இன்று வலிமைமிக்க சமுதாயமாக வாழும் இஸ்ரேல் நாடு. அந்த யூதர் சமுதாயத்திடம் தன்னம்பிக்கை, மனத்திட்பம், உறுதி, வலிமை, காரியங்களைச்



சாதிக்கும் திறமை நிலவுகிறது இத்துடன் நம்நாட்டில் – நம் சமுதாயத்தில் பல்வேறு துறைகளில் நிலவும் எண்ணங்களை ஒப்பிட்டுப் பார்ப்போம்.

சமுதாய ஏற்றத் தாழ்வுகள் எவ்விதம் மன எண்ணங்களைப் பாதிக்கின்றன என்பதைக் கவனியுங்கள். செல்வாக்கும் பணமும் ஆரம்பப் பள்ளியிலிருந்து உயர்நிலைப்பள்ளி, கல்லூரி, வேலைபெறுதல், திருமணம் செய்து கொள்ளுதல் என்று எல்லா நிலையிலும் நம் சமுதாயத்தைப் பாதிக்கிறது.

எல்லாரும் 'கியூ'வில் உணவுக்கு நிற்கும்போது கடைசியில் வந்த சிலருக்குத் தனிமரியாதை – முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அவர்களுக்குச் சலுகைகள் கிடைக்கின்றன ஏன்? கடைசியில் வந்தவர் ஒரு எம். எல் ஏ. யாக, மந்திரியாக, பணக்காரராக, உணவு வழங்குபவருக்கு உறவினராக இருக்கக் கூடும்!

இதே கதிதான் வாழ்க்கையில் எல்லா நிலைகளிலும். வாழ்க்கை என்கிற '' கியூ '' வில் நிற்பவர்களுக்கு ஏற்படுகிறது. பணம் உள்ளவர்கள், செல்வாக்கு உள்ளவர்கள் பள்ளியிலும், கல்லூரியிலும் தேர்வு பெற முடியும். அதிக மார்க்குகள் பெற முடியும். நல்ல வேலை பெற முடியும்.

படிக்கும் மாணவனுக்குப் பள்ளியில் என்ன சொல்லிக் கொடுக்கிறோம்? நேர்மை, நியாயம், சமதர்மம், உண்மை சத்திய நெறி என்பன போன்றவற்றைப் பாடங்கள் மூலமாகவும் கதைகள் மூலமாகவும் சொல்லிக் கொடுக்கிறோம்.

அந்த மாணவன் நேர்மையைப் பற்றிச் சொல்லிக் கொடுக்கும் தன் கல்லூரியிலே காண்பதென்ன..,? தன்னை விட திறமையில் குறைந்தவன் மருத்துவக் கல்லூரிக்கு, பொறியியல் கல்லூரிக்கு, வாணிபக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதை, தன்னை விடத் திறமையில் குறைந்தவன் எடுத்தவுடன் பெரிய வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதை, தன்னை விட திறமையில் குறைந்தவனின் மாமா பெரிய அதிகாரிக்கு, பெரிய அமைச்சருக்கு வேண்டியவராயிருப்பதால் அவன் வேலை உயர்வு பெறுவதை...

ஆகக்கூடி மாணவனும், இளைஞனும் ஒரு நேர்மைக்கும், நியாயத்திற்கும் அப்பாற்பட்ட ஒரு சமுதாயம் செயல்படுவதைக் காண்கிறார்கள்.

குற்றஞ் சாட்டப்பட்ட ஒரு பெரிய மனிதர் பணத்தாலும், செல்வாக்காலும், தந்திரத்தாலும் குற்றங்களிலிருந்து தப்பிவிடுகிறார் என்றால் எத்தகைய நீதிமுறை அங்கு நிலவுகிறது என்று

எண்ணிப்பாருங்கள். நீதியில் நீதித்துறையில் நம்பிக்கையில்லாத போது ஒரு சமுதாயம் எதை நம்பி வாழும் என்பதை யோசித்துப் பாருங்கள். ஒருவருக்கு யாரைத் தெரியும். அவருக்கு என்ன செல்வாக்கு இருக்கிறது. அந்தச் செல்வாக்கை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும். என்ன செய்து கொள்ளலாம். என்று சிந்திக்கும் செயல்படும் – சமுதாயம் அது என்று உழைப்பில் நம்பிக்கை வைக்கப்போகிறது? என்று உழைக்க முற்படப் போகிறது? என்று நியாயத்தில் நம்பிக்கை வைக்கப் போகிறது.

''நியாயமான வழியில் பாடுபட்டால் ஒன்றும் நடக்காது'' என்று சொல்லிக் கொண்டு, நேர்மை பிறழ்ந்து நடக்கும் சமுதாய மனோபாவம் இதனால் வளர்கிறது. பின் எப்படி அது முன்னுக்கு வரும்...?

## நாட்டில் நிலவும் எண்ணங்கள்

அரசாங்க யந்திரம் சமுதாயத்தில் உற்பத்தி செய்யாத பகுதி; சமுதாயத்தை நெறிப்படுத்தும் பகுதி அரசாங்கயந்திரம் புதுப்பொருளை உற்பத்தி செய்து வருமானத்தை ஈட்டுவதில்லை.

அரசாங்க யந்திரம் சரிவரச் செயல்படாததற்குப் பல காரணங்கள் உள்ளன.

அரசியல்வாதிகளின் தலையீடு, உத்தியோகத்தர்களின் மனோபாவம், வாழ்க்கையை – அலுவலை – செக்குமாடாக ஓட்டிக்கொண்டிருக்கும் ஒருநிலை, துணிவுடன் முடிவெடுத்து செயல்படும் வாய்ப்பின்மை எனக் கூறலாம்.

அரசாங்க அதிகாரிகள் ஒருசிலர் உண்மையாக உழைக்கிறார்கள் என்றால் இதையும் மீறி நாட்டுக்காகப் பாடுபடுபவர்கள் என்றுதான் குறிப்பிட வேண்டும்.

ஒருநாடு, தொழிலாலும், உழைப்பாலும், தொழில் சிந்தனையாலும்தான் வளம்பெற முடியும், சினிமாவும், அரசியலும் சமுதாயத்தின் வெவ்வேறு சிறு பகுதிகள். அமெரிக்கா விஞ்ஞான அறிவாலும் தொழில் வளத்தாலும் தான் முன்னேறியிருக்கிறது. ஜப்பான் உடலுழைப்பாலும், அறிவாலும் தான் முன்னேறியிருக்கிறது.

ஒரு முன்னேறும் சமுதாயத்தை அங்கு நிலவும் எண்ணங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். அரசியல்வாதிகள் எதைப்பற்றிப் பேசுகிறார்கள், கல்வியாளாகள் எதைப்பற்றி விவாதிக்கிறார்கள், தொழிலதிபர்கள் எதைப்பற்றிக் கவலைப்படுகிறார்கள், இளைஞர் உலகத்தின்



சிந்தனை என்ன? போக்கென்ன? என்பவற்றிலிருந்து அந்நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது, எங்கே போகும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

ஊழலும், லஞ்சமும் சமுதாயக் கேடுகளாக நாட்டில் நிலவியிருக்கும் போது – அத்தகைய எண்ணங்கள் மக்கள் கவனத்தைக் கவரும் போது நாட்டின் நெறிமுறைகள், கற்பு எல்லாம் காற்றில் பறக்கிறது தர்மம் சரிகிறது. நியாயம் தோற்கிறது. அந்நாடு தன்னைத்தானே அழித்துக் கொள்கிறது.

ஒருநாடு முன்னேற வேண்டுமானால் அந்நாட்டில் அதற்கான எண்ண விதைகள் காற்றில் பரவ வேண்டும். நல்லெண்ணம், திட்டம், தன்னம்பிக்கை, தளர்வின்மை உறுதி, தர்மம், நியாயம், உழைப்பு இலட்சியம், பொதுநன்மை என்ற மகத்தான எண்ணங்கள் எங்கு நோக்கினும் எதிரொலிக்க வேண்டும். சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதியும் அஞ்சாமல் சுயநலத்தைப் பின்னுக்கு வைத்துப் பாடுபட வேண்டும். எழுதுகிறவர்கள் எழுத வேண்டும், பேசுகிறவர்கள் பேசவேண்டும். பாடுபவர்கள் பாடவேண்டும், உழைப்பவர்கள் நெறிப்படுத்துபவர்கள் என்று எல்லாரும் அந்த ஒரு லட்சியத்திற்காகப் பாடுபட வேண்டும்'

அத்தகைய ஒரு மலர்ச்சி – எண்ணப்புரட்சி இரண்டு வழிகளில் ஏற்படலாம்.

ஒன்று: மகத்தான தலைவன் மூலம். லட்சிய வெறிகொண்ட தலைவன் தன் லட்சியங்களைத் தன்சொல், தன் நல்லெண்ணம், தன் உழைப்பு மூலம் ஒரு நாட்டின் கோடானுகோடி மக்களையும் உசுப்பி எழுப்பிவிட முடியும்.

இரண்டாவது: ஒருநாட்டில் அங்குள்ள படித்த மக்கள் ஒவ்வொரு துறையிலும், அஞ்சாமல் ஒரு குறிப்பிட்ட லட்சியத்தை நோக்கித் தங்கள் எண்ணங்களை மலரவிடுவதுதான். இங்கிலாந்தில் சோஷலிசப் புரட்சி நடந்தது. படித்தவர்களாலும் பேர்னாட்ஷாவாலும் தான், அமெரிக்காவில் வளமான வாழ்வை நோக்கி எண்ணங்கள் மலர்ந்ததற்கு அங்குள்ள விழிப்புப்பெற்ற மக்களிடம் நிலவிய எண்ணங்கள் தான் காரணம்.

இன்றைய உலகில் மனித முயற்சியால் செழிப்புடன் வாழும் நாடுகள் சிலவற்றைக் குறிப்பிட வேண்டுமானால் அமெரிக்காவையும், ஜப்பானையும் தான் குறிப்பிட வேண்டும்.

அமெரிக்காவில் சின்னஞ்சிறு குழந்தைக்கு முதல்பருவப் படிப்பிலேயே சொல்லிக் கொடுக்கப்படுவது ''எப்படித் தன் செயலுக்குத் தானே பொறுப்பு'' என்பது தான். கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும் பாதிப்பேருக்குமேல் வாணிபம் சம்பந்தமான பாடங்களை

படிக்கிறார்கள். ''பிசினஸ்'' சம்பந்தமான, தொழில் செய்யும் முறை சம்பந்தமான படிப்பு. பின் ஏன் பாடசாலையிலிருந்தும், கல்லூரியிலிருந்தும் வெளிவரும் மாணவன் – தொழில் சம்பந்தமான எண்ணங்களில் மனதை ஊறப்போட்டவன் – சொந்தமாக ஒரு பிசினஸ் செய்வதைப் பற்றிச் சிந்திக்காது இருப்பான். ஒவ்வொரு கல்லூரியிலும் அனேகமாக வாணிபப் படிப்புச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. பல்கலைக் கழகங்களில் வாணிபம் சொல்லித்தரும் பேராசிரியர்கள் தொழில் உலகிற்கு ஆலோசகர்களாக இருக்கிறார்கள்.

நாட்டில் நிலவும் எண்ணங்களையும், அதன் விளைவுகளையும் பாருங்கள். எண்ணத்திற்கேற்பதான் வாழ்வு இருக்கும். வெறும் கெடுபிடிகளால் உற்பத்தி பெருகுவதில்லை; வறுமையும், ஆடம்பரமும் தான் பெருகுகின்றன. அதுதான் நமது நிலை.

அமெரிக்காவில் மிக அதிகமாக விற்பனையாகும் ஒரு தேசிய பத்திரிகை ''வால் ஸ்டிரீட்ஜர்னல்'' என்பதாகும். அது வியாபார சம்பந்தமான – வாணிபம், தொழில், ஸ்டாக் மார்க்கட் – சம்பந்தமான நாளிதழ். நாட்டின் எல்லாருடைய கருத்தும் எங்கிருக்கிறது என்று கவனியுங்கள்.

அமெரிக்கநாட்டு மக்களின் எண்ணங்கள் தங்களை உயர்த்திக் கொள்ளும் – வளம்படுத்திக் கொள்ளும் சிந்தனைகள்.

நமது ஊரில் நடப்பதுபோல அமெரிக்காவில், காலமான புலவர்களுக்கு யாரும் விழா எடுப்பதில்லை. நானூறு ஆண்டுகளுக்கு முன் சிவப்பிந்தியனின் நாட்டுக்குள் அமெரிக்கன் அடியெடுத்து வைத்தான் என்று யாரும் பத்தினிக் கோட்டம் கட்டுவதில்லை. அண்ணன் ஆபிரகாம் லிங்கன் பிறந்தநாள்விழா என்று வழக்காடு மன்றம் இல்லை. தந்தை வாஷிங்டன் பிறந்தநாள் என்று கவியரங்கம் இல்லை. பட்டிமன்றம் இல்லை. அதெல்லாம் ஒரு குறிப்பிட்ட இலக்கியக் கழகங்களின் வேலைகள். நமது ஊரிலோ இவை எல்லாம் பொதுவாழ்வை நிறைக்கும் அளவு முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. 'கற்பிலே சிறந்தவள் கண்ணகியா, மாதவியா' என்றும், 'சிறந்த சகோதரன் லட்சுமணனா, பரதனா' என்றும், 'அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்' என்றும் நம் பொது மேடைகள் முழங்காத நாளில்லை.

''பழமையை மெல்லுபவர்கள், எதிர்காலத்தைக் கண்டு பயப்படுபவர்கள்; புதுமைகளுக்கு ஈடுகொடுக்க முடியாதவர்கள்; அவர்கள் வாழ்க்கை முடிந்துபோன வாழ்க்கை'' என்று மனோதத்துவ ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

இந்த மனோதத்துவ விளக்கங்களுடன் சிலப்பதிகாரக் கூடத்தையும், வள்ளுவர் மாடத்தையும், மெரினாவில் நிற்கும் சிலைகளையும்



பார்க்கிறேன். தமிழ்ச் சமுதாயம் ஏன் பழமையை மென்று அசைபோடுகிறது...? தமிழ்ச் சமுதாயம் வருங்காலத்தைக் கண்டு பயப்படுகிறதா என்ற அச்சம் மனதில் தோன்றுகிறது.

'தமிழன்னையின் கையிலே சிலம்பும், சிந்தாமணியும், வளையாபதியும், குண்டலகேசியும்' என்று எத்தனை நாளைக்குக் கூறிக்கொண்டு அன்றாடப் பிரச்சனைகளை, வருங்காலச் சமுதாயத்தை ஒதுக்கித் தள்ளப் போகிறோம்?

இன்று தமிழன்னையின் கையிலே, கழுத்திலே, காலிலே, மடியிலே எல்லாம் – தமிழ் மக்களின் வாழ்வை வளமான வாழ்வாக ஆக்கும் வழிகள் பற்றிய புத்தகங்கள் தான் தேவைப்படுகின்றன. நாம், நம்மை நாமே மட்டும் ஏமாற்றிக் கொள்ளவில்லை. நமது சந்ததிகளின் வாழ்க்கையினையும் எங்கோ தள்ளிக் கொண்டு போகிறோம்.

''அடுத்த சில ஆண்டுகளில் நாட்டின் எந்தெந்தப் பிரச்சனைகளைக் கவனிக்கப் போகிறோம்? அவற்றிற்கு எப்படிப் பரிகாரம் காணப் போகிறோம்? அதற்கான திட்டமென்ன'' — இதுபற்றி ஏன் நாட்டில் பேசப்படவில்லை. அன்றாடங் காய்ச்சியாக ஏன் நாடு ஓடிக் கொண்டிருக்கிறது. இவை எல்லாவற்றிலும் மிக முக்கியமாகச் சிந்திக்கப்பட வேண்டிய அவசரப் பிரச்சனை என்ன? இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதுதான் நாட்டில் இன்று தேவைப்படும் சிந்தனை. அதை எப்படிக் கையாளப் போகிறோம்?

நமக்குத் தெளிவு வேண்டும்; திட்டம் வேண்டும். அதை யார், எப்போது செயல்படுத்துவார்கள் என்கிற நிர்ணயம் வேண்டும்.

வேலையில்லாத படித்தவர்களை, பட்டதாரிகளை நாம் நாளும் உற்பத்தி செய்த வண்ணம் இருக்கிறோம். அதாவது மனிதசக்தி வீணாகிறது. அதுவும் தொழில்துறையில் பயின்ற மனித சக்தியை நாம் வீணடிக்கிறோம். அவர்களை நமது சமுதாய மேம்பாட்டிற்கு நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்களை நாம் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

நாம் புத்திசாலிகள் என்று சொல்லிக்கொண்டிருப்பதில் ஒன்றும் பயனில்லை. அறிவை நாம் பயன்படுத்த வேண்டும். கம்பர் மாநாடு கூட்டுபவர்கள், சிலப்பதிகாரம் பேசுபவர்கள், மாவீரனுக்குச் சிலை எடுக்கும் செல்வந்தர்கள் நாட்டுப் பிரச்சனைகளை விவாதிக்க, வழிகாண மாநாடு கூட்டினால் நல்லது. அது அரசியல் மாநாடாகத் தான் இருக்க வேண்டும் என்பதன்று. எல்லாப் பிரச்சனைகளும் அரசியல் பிரச்சனைகளல்ல... பல பிரச்சனைகளுக்கு அரசியல் வழிகாட்டும்— உதவும். ஆனால், நம்நாட்டை அலைக்கழிக்கும் இன்றையப் பிரச்சனைகள், பொருளாதாரப் பிரச்சனைகள், கல்விப் பிரச்சனைகள், நிர்வா

கப் பிரச்சனைகள், இவை அனைத்தையும் அரசியலாக்காமல், அமைதியாகச் சிந்தித்து, விவாதித்து நாம் வழிகாண முடியும். வழிகாண வேண்டும்.

நாம் நமது அறிஞர்களைப் பயன்படுத்த வேண்டிய தருணம் வந்துவிட்டது. நாம் விஷயங்களை புதிய நோக்கில் அணுகி வழிகாண வேண்டிய தருணம். ஓர் -ரம் வந்துவிட்டது.

தொழில்துறை அதிபர்கள் தான் நாட்டின் வருமானத்தை உண்டு பண்ணும், அதிகப்படுத்தும் அறிவும் திறமையும் கொண்டவர்கள். பொறியியலாளரும், விஞ்ஞானிகளும், பேராசிரியர்களும், தொழிலதிபர்களும் தான் ஒரு நாட்டின் பொருளாதார வளத்திற்கு வித்தாக இருப்பவர்கள். அத்தகைய முக்கியத்துவம் பெற்ற ஒரு கூட்டம் இன்று நம் நாட்டில் இருக்கும் இடம் தெரியாமல் முடங்கிக் கிடக்கிறது.

மனிதன் தன் அறிவாலும் திறமையாலும் தான் முன்னுக்கு வருகிறான். அறிவும் திறமையும் கொண்ட படித்தவர்கள் தான் ஒரு நாட்டின் சொத்து. மருத்துவர்களும், பொறியியலாளர்களும், விஞ்ஞானிகளும், பாடசாலை ஆசிரியர்களும், தொழில் அதிபர்களும்தான், அந்தந்தத் துறையில் மிக அதிகம் படித்தவர்கள். அவர்கள் அதிகம் செலவு செய்து, பயிற்சி பெற்றுத் தியாகங்களையும் சிரமங்களையும் மேற்கொண்டு தங்களை உருவாக்கிக் கொண்டவர்கள்.

அறிவோ, அனுபவமோ, திறமையோ, பயிற்சியோ இல்லாத ஒரு அரசியல்வாதி தனது வெறும் வாய்ச்சாலத்தின் மூலம் பதவிக்கு வந்து படித்தவர்களை மதிக்காத உதாசீனம் செய்யக்கூடிய நிலை ஒரு நாட்டில் இருந்தால் அந்நாட்டைப்பற்றி என்ன சொல்வீர்கள்?

எதைப் போற்றுகின்றோமோ, எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ, அதுதான் வளரும், பொய்மையில் தன்னை மறக்கச் செய்யும் கலைகளுக்கும், வெறும் மேடைப் பேச்சுக்கும் நாம் முக்கியத்துவம் கொடுத்தோமானால் அவைதான் வளரும். நாடு எங்கே முன்னேறும்?

நாம் வளரவேண்டுமானால், வளம்பெற வேண்டுமானால் வளர்ந்து நிற்கும் பெரிய நாடுகளை முன்னோடியாகக் கொள்ள வேண்டும் அமெரிக்காவில் அந்தந்தத் தொழில்துறை அனுபவம் பெற்றவர்களை அமைச்சர்களாக (செயலாளர்களாக) ஆக்குகிறார்கள் அமெரிக்காவின் இன்றைய பாதுகாப்புச் செயலாளர் இராணுவத்தில் வேலை பார்த்தவர். இன்றைய தொழில்துறை செயலாளர் அதற்குமுன் ஒரு பெரிய கம்பனியை நிர்வாகம் செய்தவர். நிதி இலாகா செயலாளர் பல பாங்குகளின் நிர்வாகியாக இருந்தவர். இப்படியே பட்டியல் நீள்கிறது நாட்டின் தலைசிறந்த மேல்மட்டத்தில் உள்ள மனிதர்கள் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.



அரசியல் வாதிகள் வருவார்கள்; போவார்கள். அரசியல் தலைவர்கள் தோன்றுவார்கள்; மறைவார்கள். ஆனால், தொழில் துறை நிபுணர்கள் நிரந்தரமாக இருப்பவர்கள். அவர்கள் யாருக்கும் பயப்படக் கூடாது. மனச்சாட்சியும், நாட்டு நன்மையும் மட்டுமே கருத்தாக இருக்க வேண்டும்.

நாடு மாற வேண்டுமானால் நமக்கு அப்படி ஓர் எண்ணம்– ''மாற வேண்டும்,'' என்ற எண்ணம் வேண்டும்; கொஞ்சம் தைரியம் வேண்டும்; ஒரு திட்டம் வேண்டும்; நம்மால் முடியும் என்ற தன்னம்பிக்கை வேண்டும்; எதிர்ப்பு கண்டு சளைக்காத மனம் வேண்டும்; திட்டத்தை செயலாக நிறைவேற்றும் செயல்திறம் வேண்டும்.

ஒரு பணம் படைத்த சமயப் பெரியாருடன் பேசுகிறேன். ''ஐயா, சைவமும் தமிழும் இன்றிருப்பது போதும், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புத் தரும் வழியில் மடத்துப் பணத்தை முதலீடு செய்து தொழில் தொடங்குங்கள்'' என்றேன்.

பாரம் பரியமும், திறமையும், நல்ல பொன் விளையும் பூமியும் இருக்கும் போது, ஏன் நாம் கஷ்டப்படுகிறோம். அல்லலுறுகிறோம்...? எத்தனையோ சிறிய நாடுகள் — நம்மை விட மக்கள் தொகை பெருகிய நாடுகள் மலையையும், பாறையையும் பூமியாகக் கொண்ட நாடுகள், இன்று உலகில் பெருமையுடன் தலை நிமிர்ந்து வாழ்கின்றன. யுத்தத்தால் நாசஞ் செய்யப்பட்ட ஜப்பான் கடந்த முப்பதாண்டுகளில் அமெரிக்காவே அஞ்சும் வண்ணம் பொருளாதார வளம் பெற்று விட்டது. ஜப்பானியரும் நம்மைப் போன்ற ஆசிய நாட்டவரே.

நாம் எங்கு தவறு செய்தோம்...? ஏன் ஏழ்மையிலிருந்து விடுபட முடியவில்லை? ஏன் நம்மால், நமது இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளித்து நம்நாட்டு உற்பத்தி வளத்தைப் பெருக்க முடியவில்லை. வசதியான வாழ்க்கை நமது பிறப்புரிமையாக இருக்க வேண்டும். சுகமாக வாழ்வது, பொருளீட்டுவது, நேர்மையாய் வாழ்வது ஏன் நமக்கு முடியாது போய்விட்டது? கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

ஒரு நாட்டின் மூலதனம் அந்நாட்டின் மக்கள், அதுவும் அந்நாட்டின் மேல்மட்டத்து மக்கள்; அறிவும் திறமையும் அனுபவமும் பயிற்சியும் பெற்ற மக்கள். அவர்களிடத்திலேயே இப்படி ஓர் அவநம்பிக்கை, ஓர் இயலாமை, ஒரு விரக்தி எழுகிறது என்றால் அடுத்த தலைமுறை எங்கே போகும்...என்று சொல்லச் சோதிடன் தேவையில்லை. எந் நாட்டு மேல்மட்ட மக்கள் தன்னம்பிக்கை

இழந்து "நான் என்ன செய்ய முடியும்...? எங்கள் சங்க அமைப்புக்கள் என்ன செய்ய முடியும்?" என்று கையாலாகாத்தனத்தினால் கையை விரிக்கிறார்களோ அது. அந்நாட்டிற்குக் கெடுதல்; அந்நாட்டின் எதிர் காலத்திற்கு நல்லதன்று.

தன்னம்பிக்கை இழந்த சமுதாயம் எதையும் சாதிக்கப் போவதில்லை, எந்தச் சமுதாயம் "என் எதிர்காலம் என் கையிலில்லை" என்று கூறுபவர்களால் நிறைந்திருக்கிறதோ அந்தச் சமுதாயத்தின் எதிர்காலம் இருளடைந்தது என்று சமுதாய இயல் பேராசிரியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

தேர்தலுக்கு நிற்பவர்கள் தனது கொள்கைகளைப் பற்றிப் பேசாது எதிரியின் குணங்களை இழித்துக் கூறுவதில்லை. காரணம் அப்படிப்பட்ட மனிதனைத் தலைவனாக அமெரிக்கச் சமுதாயம் ஏற்றுக் கொள்வதில்லை, அவனுக்கு ஓட்டுப் போடமாட்டார்கள். இது நன்றாகத் தெரியும். தேர்தலில் நிற்கும் அரசியல் தலைவர்களுக்கு.

முன்னாளில் கிராமத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் பொதுக் குளத்தில் தண்ணீர் மொள்ளக் கூடாது. கோயிலுக்குள் நுழையக் கூடாது என்று கூறியவர்களும், தண்ணீரின் புனிதம், கோயிலின் புனிதம் பாழ்பட்டு விடும் என்றுதான் வாதிட்டார்கள். மகாத்மா காந்தியோ "'அங்கே மனித உரிமைகளைக் காலில்போட்டு மிதிக்கிறோம்'' என்று தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காகப் போராடினார். தண்ணீரின் புனிதம், கோயிலின் கடவுள் தன்மை என்ற பெயரில் தாழ்த்தப்பட்ட மக்களின் மனித உரிமைகளைப் பறிப்பது எந்தத் தர்மத்தில் சேர்ந்தது? அது கடைந்தெடுத்த சுயநலமல்லவா...? அதே போலத்தான் நாம் நம் உரிமைகளைக் கேட்கிறோம். உரிமைகளைக் கேட்பது எப்படிப் பாவமாகும்? புனிதத்தைப் பாழ்படுத்துவதாகும்? உரிமைகளைக் கேட்கப் பயப்படுகிறவன் கோழை — பேடி;

எனது யப்பானிய நண்பர்கள் கூறுவார்கள்.

''இந்த உலகில் நம் கண்ணுக்குத் தெரியாது சில சக்திகள் செயல்படுகின்றன. சில சக்திகள் உலவுகின்றன. அவை தாம் நம்மை நடத்திச் செல்கின்றன. அவைதான் நமக்கு வழிகாட்டுகின்றன'' என்று.

இது உண்மையாய் இருக்குமா எனப் பலமுறை நான் யோசித்ததுண்டு. எண்ணம் ஒரு சக்தி. ஒருமுகப்படுத்தப்படும் எண்ணம்—சதா சிந்திக்கப்படும் ஆசை—வலுவடைந்த சக்தியாய் மாறுகிறது. ஒரு மனிதன் எந்த எண்ணத்தில் ஆக்கிரமிக்கப்படுகிறானோ அந்த எண்ண சக்தி அவனைச் சுற்றிப் பரவி நிற்கிறது. இதுதான் உண்மையாக



இருக்க வேண்டும். அந்த எண்ண சக்தியை அவன் செல்லுமிடங்களிலெல்லாம் பரப்புகிறான்; ஒரு மலரின் மணம் ஒரு சோலையையே நிறைப்பதுபோல.

ஒத்த உள்ளங்கள் ஒன்றுசேர்ந்து முகிழ்த்துச் சங்கமமாவதைப் போல, இத்தகைய ஒத்த எண்ண சக்திகள், வெளியில் உலவும் பிற எண்ண சக்திகளைக் கவருகின்றன. இதனால் ஒத்த உள்ளங்களின் சக்தி, ஒருமித்த பெருஞ்சக்தியாக மாறுகிறது,

ஆகவே, நம் மனம் என்னும் சோலையில் முன்னேற்றத்தைப் பற்றிய எண்ண விதைகளைத் தெளிப்போம். தோல்விகளை எல்லாம் தூளாக்கும் வெற்றி எண்ண விதைகளைத் தூவுவோம். மனம் எனும் சோலையில் நம் வாழ்வையும் நாட்டு வாழ்வையும் எப்படி நல்லவிதமாக மாற்றுவது என்ற சாதனை எண்ணங்களை விதைப்போம்.

இப் பிரபஞ்சத்தில் பல சக்திகள் காத்துக் கொண்டிருக்கின்றன உதவுவதற்கு. ஒத்த உள்ளங்கள் ஏற்படுத்தும் எண்ணசக்தி மகத்தானது. நன்மையை நாடித்தான் இப் பிரபஞ்சம் இயங்குகிறது.

நாட்டின் இன்றைய தலையாய பிரச்சனை ஏழ்மை; வறுமை; நாட்டின் பொருளாதாரம்; வேலையில்லாமை.

தமிழுக்கோ, ஆத்மீகத்திக்கோ மாநாடு கூட்டுவதற்குப் பதிலாக, தலைமை தாங்குவதற்குப் பதிலாக, ஊருக்குஊர்—மாவட்டத்திற்கு மாவட்டம் தொழிலதிபர்களையும்—இளைஞர்களையும் ஒன்றுகூட்டித் தொழில் மாநாடு நடத்த வேண்டும்.

விஞ்ஞானம், டெக்னாலஜி, தொழில்நுட்பம் இவற்றினால் நம் நாடு முன்னேற முடியுமே தவிர, மற்றபடி தமிழ்க் கவிதையாலோ, சினிமாவினாலோ, அல்லது அரசியல் தலைவர்களுக்கு சிலை எழுப்புவதாலோ அல்ல, என்பதை நாம் உணர வேண்டும்.

யப்பானில் அரசாங்க அதிகாரிகளும், தொழிலதிபர்களும் ஒன்று கூடி எப்படி அமெரிக்காவுடன் போட்டி போடுவது என்று இணைந்து திட்டமிடுகிறார்கள். நம் ஊரில் அரசாங்கம் அந்த நிலையில் தொழிலதிபர்களுடன் இணைந்து உதவ முன்வர வேண்டும்.

பிற மாநிலங்களிலும், பிற நாடுகளிலும் என்னென்ன புதிய தொழில் முறைகள் வந்திருக்கின்றன; புதிய பொருட்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன உலகச் சந்தையில் எந்தெந்தப் பொருள்களுக்குக் கிராக்கி இருக்கிறது; எதையெதை நாம் செய்யலாம் என்று ஆராய்ந்து அந்தந்தத் தொழில் முறைகளை ஆர்வமுள்ளோருக்கெல்லாம் வழங்கும் ஒரு விஞ்ஞான 'எக்ஸ்சேஞ்ஜ்' நிறுவப்பட வேண்டும்.

குறிப்பிட்ட தொழில்களில் பயிற்சி பெற்றோருக்கெல்லாம் மூலதனமாகப் பணத்தைக் கடன் கொடுத்து, அவர்கள் தொழிலில் இறங்க ஆர்வம் ஊட்ட வேண்டும்.

திரையுலகக் கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் விருது வழங்குவது போல, 'கலைமாமணி' பட்டமளித்துக் கலைஞர்களைக் கொண்டாடுவது போல நம் விஞ்ஞானிகளை—தொழிலதிபர்களை—சிறு வியாபாரிகளை ஆண்டுதோறும் கௌரவிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

அடுத்த தலைமுறையில் வளரவிருக்கும் விஞ்ஞானத்துறைகளான கம்பியூட்டர் (*Computer*), எலக்ட்ரானிக்ஸ் (*Electronics*), ரொபாடிக்ஸ் (*Robotics*), மாற்று எரிபொருள் (*Alternative Fuels*), நுண்ணுயிர்களைக் கொண்டு விவசாயம் மருத்துவம் (*Bio-technology*) போன்ற துறைகளில் நாம் தலைமை எடுக்க ஆவன செய்ய வேண்டும். இதற்கு இன்று திட்டமிட வேண்டும்; செயல்பட வேண்டும்.

நாட்டின் அமைச்சர்களும், அரசாங்க அதிகாரிகளும் விளம்பரம் பெற்று நாட்டில் தெரிவதற்குப் பதிலாக, விஞ்ஞானிகளும்—தொழிலதிபர்களும்—கல்வியாளர்களும் நாட்டின் முன்னே தென்பட வேண்டும்.

நாம் ஆண்டுதோறும் கம்பர் விழா என்றும், அவர் மகன் அம்பிகாபதி விழா என்றும், அத்தைப்பாட்டி கதைகளுக்கு விழா என்றும், கவி சம்மேளனம் கூட்டுகிறோம். இவை எல்லாம் எந்த விதத்தில் நம் பொருளுற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

பூம்புகார் மண்டபங்களையும், வள்ளுவர் மாடத்தையும், ஊருக்கு ஊர் சிலைகளையும் கண்டு நான் நம் மூதாதையர் பற்றிப் பெருமைப்படுகிறேன். இன்று, இங்கு வாழும் நாம், நம் சோற்றுக்கு இதன் மூலம் என்ன செய்தோம்; ஏழைகளின் சோற்றுக்கு என்ன செய்தோம்; என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பழம்பெருமை ஒரு காலத்தில் தேவைப்பட்டது. இன்றல்ல...

லட்சியவெறி; நாடு முன்னேற வேண்டும் என்ற லட்சியவெறி; நம்நாடு பொருளாதாரத்தில் சிறந்தோங்கி மக்கள் எல்லோரும் வீடும், துணியும், சோறும் பெற்று வாழவேண்டுமென்ற நன்னோக்கு; 'எனக்குச் சுயநலமல்ல முக்கியம்—பொதுநலம்தான் என் லட்சியம்' என்ற மகாத்மா காந்தியின் லட்சிய வேகம்.

ஜப்பான் தன் அறிவினால் மட்டுமே இன்று அமெரிக்காவுடன் போட்டி இடுகிறது.



போனதற்கெல்லாம் புலம்பிக் கொண்டிருக்காமல், யாரையாவது குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்காமல், சூழ்நிலையைக் குறைகூறிக் கொண்டிருக்காமல், சுயநல நோக்கில்லாமல், நாட்டின் எதிர்காலத்தை எண்ணி, நம் குழந்தைகளின் வருங்காலத்தை எண்ணி நாம் திட்டமிட வேண்டும்; செயல்பட வேண்டும்!

இது நம்மால் முடியும்.

ஆன்மீக அடிப்படையில் உயர்வாழ்க்கை நெறிகளுடன் கூடிய தனிமனித வளர்ச்சியில் தான்-சமுதாய வளர்ச்சி இருக்கிறது. முடிவெடுக்கும் திறன், லட்சியத் தெளிவு, முன்னேறும் ஆர்வம், முன்னேற்றத்திற்கான திட்டங்கள், சளைக்காத மனம், செயல் என்று, சுய வளர்ச்சியின் பல்வேறு பாகுபாடுகளையும் இன்றைய மனவியல் அறிவு நமக்குப் போதிக்கிறது. சுயவளர்ச்சி பெற்ற தனிநபர்களாலான ஒரு சமுதாயம் தான் ஒரு முழுவளர்ச்சி பெற்ற சமுதாயமாக அமையும்.

கஷ்ட நஷ்டங்களை ஏற்று சுயதொழில் செய்து உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற நிலை தமிழ்நாட்டில் என்றைக்கு ஏற்படுகிறதோ, அன்று தான் தமிழ் நாட்டின் மொத்த வருமானமும், தமிழனின் சராசரி வருமானமும் அதிகமாகும்.

நம்மால் முடியும் தம்பி என்பது நமது தாரக மந்திரமாகும்.

தமிழர்களின் அடிப்படை மனோபாவங்கள் மாறாத வரை எந்த வித கல்வி அபிவிருத்தியிலோ, பொருளாதார வளர்ச்சியிலோ ஒரு நிரந்தரமான மாற்றத்தைக் கொண்டுவர இயலாது.

வழிபட்டுத் துதிபாடும் தமிழர்களது மனோபாவம், நெஞ்சு வெடுத்து வேலை செய்யும் மனோபாவம், புதியன காணத் தயங்கும் சம்பிரதாய மனோபாவம், பொது சுகாதாரத்தில் அக்கறையற்ற நிலை, சுயதொழில் செய்யப் பயப்பட்டு ஊழியம் செய்ய முற்படும் மனோபாவம்.

தனி மனிதன் வளர்ச்சி பெற்று வளமான வாழ்வு வாழத் துடிக்கும் மனித உணர்வு சமுதாய ஈடுபாடு என்ற குணத்தால் இந்தப் பிரபஞ்சம் முழுவதையுமே தொடுகிறது. அந்த ஆத்மீக அடிப்படையில் தான் மக்கள் சக்தி இயங்குகிறது! நம்மை எல்லாம் தொடுகிறது. மக்கள் அனைவரையும் இணைக்கிறது. வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!!

*இச்சிந்தனைத் தொகுப்பு டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி அவர்கள் எழுதிய "நாடு எங்கே செல்கிறது" என்ற நூலில் இருந்து தொகுக்கப் பெற்றது.*

—**நிறுவனர்.**

# மக்கள் சிந்தனை மாறவேண்டுமானால்!

## சூழல் நன்னிலை அவசியம்

— நிறுவனர் —

எமது வாழ்வில் இன்று தவிர்க்கஇயலாததே தவையாக தேங்காய், இளநீர், செவ்விளநீர் என்பனவும் காணப்படுகின்றன. ஆயினும் தற்போதைய காலகட்டத்தில் இத்தேவைகளை போதியளவில் ஈடுசெய்வதற்கான தென்னை மரங்கள் இயற்கையானதும், இயற்கையல்லாததுமான பல்வேறுவிதமான தாக்கங்களினால் அருகிவருவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே இந்நிலையினை ஈடுசெய்வதற்காகவும் அதன்மூலம் எதிர்காலத்தில் தேங்காய், இளநீர், செவ்விளநீர் ஆகியவற்றின் தேவையில் ஏற்படக்கூடிய தடங்கலை நிவர்த்திப்பதற்காகவும் ஒவ்வொரு குடும்பத்தினரும் தாம் குடியிருக்கும் வீட்டு வளவில் தம்மால் இயன்றது ஒரு வருடத்திற்கு ஒரு தென்னம்பிள்ளையினையாவது நட்டு, தம் பிள்ளைகளிலொன்றாக அத் தென்னம்பிள்ளையினையும் பராமரித்து வளர்த்துவர வேண்டியது தமது கடமையென உணர்ந்து கொள்ள வேண்டும்.

எமது அன்றாட தேவைக்குப் பயன்படுத்தப்படும் தேங்காய் அண்மைக் காலங்களில் பெருமளவில் விலையேற்றம் கண்டு வருவதும் நாம் அறிந்தவையே. இவற்றிற்குக் காரணம் தேங்காய் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியேயாகும்.

இன்று பல்வேறு நெருக்கடிகளினாலும், அசாதாரண நிலைகளினாலும் பல தென்னந்தோப்புகள் உரிய பராமரிப்புக்குள்ளாக்கப்படாமை காரணமாக அவற்றின் அதிஉச்ச விளைவு அருகிவருவதையும், சில இடங்களில் தென்னை மரங்கள் முற்றாக அழிந்து வருவதையும், சில இடங்களில் தென்னை மரங்கள் இயற்கைக்கு மாறான முறையில் அழிவுகளுக்குள்ளாகி வருவதையும் நாம் கண்டும் கேட்டும் இருக்கின்றோம். இந்நிலையில் நாம் ஏனோதானோ என வாழாவிருத்தல் விரும்பத்தக்கதன்று.

நாம் அன்றாடம் கோயில்களில் வழிபாடுகளின் நிமித்தம் தேங்காய்களையும், இளநீரினையும் விரயமாக்குகின்றோம். ஆனாலும் நாம் இச்செய்கையினை விரயம் என்ற கருத்தில் கொள்வதில்லை. அருகிவரும் பொருட்களை சிக்கனமாகவும், பயன்பாட்டின் அவசியத்தை முதன்மைப்படுத்தியும் பயன்படுத்த வேண்டும் என்பதை நாம் உணர்ந்து



கொள்ள வேண்டும். அதேவேளை சமய வழிபாட்டினைக் குறைகூறும் நோக்கமாக நாம் இவ்வாறு கூற முற்படவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். வைத்தியசாலைகளிலே நோயாளி இளநீருக்கு ஆலாய்ப்பறக்க கோயில்களிலே பூஜை, அபிசேகம் என்ற பெயரில் இளநீரினை விரயமாக்குகின்ற நிலை எந்த அளவிற்குச் சரியானது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எது முக்கியம் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

தாவர வர்க்கங்களிலே தென்னையே தனது இளவயதில் பிள்ளை என அழைக்கப்படும் சிறப்பைப் பெற்றுள்ளது. இதன் மூலம் எமது வீட்டில் பிள்ளைகளோடு பிள்ளையாக பராமரித்து வளர்க்கப்பட வேண்டியதன் அவசியம் இந்தத் தென்னம்பிள்ளைக்கு உண்டு என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். வீட்டில் பெற்றோரின் கண்காணிப்பில் வளர்க்கப்பட்ட ஒரு பிள்ளை பிற்காலத்தில் பெற்றோருக்குப் பயன்படாதவனாக(ளா)கவும் காணப்படுவதுண்டு. ஆனால் அங்கே ஒரு தென்னம்பிள்ளையினை வளர்த்து பராமரித்து வந்தால் அது பிற்காலத்தில் நம்பிக்கையாக பயனுடையதாகவே இருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். நாம் தென்னம்பிள்ளைக்கு செய்கின்ற நன்றியானது எப்போதாவது ஒரு காலத்தில் அதனால் எமக்குத் திரும்பச் செலுத்தப்படும் என்பதில் சந்தேகம் இல்லை. இதனையே ஒளவையாரும்,

''நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா — நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்.''

என்று கூறியுள்ளார்.

ஒரு தென்னையிலிருந்து நாம் பலவிதமான பிரயோசனங்களைப் பெற்றுக் கொள்கின்றோம். தேங்காய், இளநீர் என்பவற்றுடன் முற்றம் கூட்ட விளக்குமாறு, வீடுகூட்ட தும்புத்தடி, வீடுகட்ட மரம், வீடுவேய கிடுகு, மங்கல, அமங்கலங்களுக்கு தோரணம் கட்ட குருத்து, விறகுக்கு மட்டை மற்றும் எண்ணெய் பிண்ணாக்கு, சொக்கலேட் என்பனவும் கிடைக்கின்றன. அதாவது ஒரு வீட்டின் தேவைகளில் பெரும்பாலான தேவைகளை இத் தென்னைமரம் ஈடுசெய்கின்றது.

தென்னையின் வளங்களை மூலப்பொருட்களாகவும், உபபொருட்களாகவும் கொண்ட தொழில் முயற்சிகள் ஏராளமாக உள்ளன. உதாரணமாக தேங்காயினை மூலப்பொருளாகக் கொண்டு தேங்காயெண்ணெய் உற்பத்தி செய்யப்படுகின்றது. அதேவேளை தேங்காயினை

உபபொருளாகக் கொண்டு உணவுப் பதார்த்தங்கள் தயாரிக்கப்படுகின்றன. அவ்வாறு தேங்காயெண்ணையினை உபபொருளாகக் கொண்டு பல்வேறு வகையான மருந்து வகைகள், உணவுப் பண்டங்கள் என்பனவும் தயாரிக்கப்படுவதுடன் சவர்க்காரத் தயாரிப்பிலும் தேங்காயெண்ணை பயன்படுத்தப்படுவதையும் நாம் அறியலாம். மற்றும் தேங்காய் மட்டையிலிருந்து தும்பு பெறப்பட்டு தும்புத்தடி, மெத்தை, கயிறு போன்றவையும் தயாரிக்கப்படுகின்றன. ஆக மொத்தத்தில் தென்னை மூலம் ஏராளமான தொழிற்துறைகள் உருவாக்கப்பட்டு தொழில்வளம் பெருக்க முடியும் என்பதில் ஐயமில்லை!

தாவர வர்க்கங்களிலே அநேகமான விருட்சங்கள் சிலகுறிப்பிட்ட பருவகாலங்களில் மட்டுமே பூத்துக் காய்க்கின்றது. ஆனால் இத் தென்னையானது வருடம் முழுவதும் பலன் கொடுக்கின்ற ஒரு உழைப்பாளியாகக் காணப்படுவதை நாம் உணரலாம்.

தென்னைமரமானது நெடிதுயர்ந்து வளர்ந்து காணப்படுவதன் காரணமாக அவ்விடங்களில் இலகுவில் முகில்கள் படிந்து மழை வீழ்ச்சிக்குக் காரணமாகின்றது என்பதும் ஓரளவிற்கு நாம் உய்த்துணரக் கூடிய விடயமாகும்.

சமய வரலாறுகளிலே நாயன்மார்கள் கோயில்களிலே தொண்டு செய்து முத்தியடைந்து ஞானஒளியிலே கலந்தார்கள் என அறியக் கூடியதாக இருக்கின்றது. அங்கு அவர்கள் செய்த தொண்டு என்ன என நாம் நோக்குமிடத்து கோயில்களிலே மரங்களுக்கு நீரூற்றிப் பராமரித்தல், பூத்தேவைக்காக பூமரங்களை அதிகம் உற்பத்தி செய்தல், தென்னை நடுதல், உலவாரத் திருத்தொண்டு மூலம் வீதிகளைத் துப்பரவு செய்தல் முதலிய கடமைகளையே பெருமளவில் செய்துள்ளனர் என்பது புலனாகின்றது. எனவே நாமும் கோயில்களிலே உடலுழைப்புத் தொண்டாக அங்கு தென்னம்பிள்ளைகளை நட்டு அவற்றைக் கடவுளாகக் கருதி நீரினால் அபிடேகம் செய்து பராமரித்து வருவதன் மூலம் கண்முன்னே அவ்வினைப்பயனை அடையலாம்.

நம்முன்னோர் நட்டுவைத்த தென்னம்பிள்ளைகள் தான் இன்று எமக்குப் பயன்தருகின்றன என்பதை நாம் நன்றியுணர்வுடன் நினைவு கூருதல் வேண்டும். எனவே அந் நன்றிக்கடனைச் செலுத்துவதற்காகவாவது நாம் இன்று தென்னம்பிள்ளைகளை எமது வீட்டு வளவிலே நட்டு நீரூற்றி பராமரித்துவரல் வேண்டும்.

பொதுவாக தாவர வர்க்கங்கள் கரியமில வாயுவை உறிஞ்சி பிராணவாயுவை வெளிவிடுகின்றன. இப்பிராணவாயு மனிதர்களாலும், விலங்குகளாலும் சுவாசிக்கப்படுகின்றது. சுத்தமான பிராணவாயுவைச்



சுவாசிக்கின்ற மனிதன் சுகதேகியாகவும், தூய சிந்தனையுடையவனாகவும் பெரும்பாலும் காணப்படுகின்றான். தற்போதைய காலகட்டத்தில் தாவர வர்க்கங்கள் பெரும்பாலும் அழிக்கப்பட்டு வருவதன் காரணமாக வளிமண்டலத்தில் கரியமிலவாயுவின் வீதம் அதிகரித்து சீதோஷ்ண நிலைகளில் மாற்றம் ஏற்படுகின்றது. நாம் இப்போது காணும் பருவமாற்றங்களும், குறைந்த மழையும் அதன் பெறுபேறுகளே. எனவே இவற்றினையெல்லாம் சிந்திக்க வேண்டிய நாம் எமது செயற்பாடுகளில் மரம் வளர்த்தலையும் சேர்த்துக் கொண்டு எமக்கு மிகவும் அதிகூடிய பயனைத் தரக்கூடிய தென்னம்பிள்ளைகளை வீட்டு வளவுகளிலேயும், கோயில் மற்றும் பொது இடங்களின் சுற்றாடல்களிலும் நட்டு பேணிப் பாதுகாத்து வளர்க்க முன்வர வேண்டும்.

சீதோஷ்ண நிலையில் மாற்றம் காரணமாக உயிரினங்களின் சிந்தனைகளும் செயற்பாடுகளும் மாற்றமடைகின்றன. வளிமண்டலம் கரியமிலவாயுவின் வீதம் அதிகரித்த நிலையினை அடைந்து வருவதனாலேயே மனிதர்களின் சிந்தனைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு அதன் மூலம் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. இன்று நாட்டிலேற்பட்ட பிரச்சனைகளுக்கெல்லாம் முக்கிய காரணம் இக்காற்று மண்டலம் அசுத்தமடைந்தமையேயாகும். காற்றுமண்டல அசுத்தத்தினைக் குறைக்க நாம் ஏராளமான மரங்களை உற்பத்தியாக்க வேண்டும். இன்று பல்வேறுபட்ட தேவைகளுக்காகவும், இயற்கையல்லாத அசாதாரண நிகழ்வுகளினாலும் காடுகள் அழிந்து, அழிக்கப்பட்டு வருகின்றன' எனவே இவ்வாறு அழிக்கப்பட்ட மரங்களினால் உறிஞ்சப்படாது விடப்படும் கரியமிலவாயு மனிதனதும் உயிர்களதும் சுவாசத்தில் சென்று பிரச்சினைகள் வளர்வதற்குரிய சிந்தனை உருவாக கணிசமான பங்கினை எடுத்துக் கொள்கின்றன. மனித சிந்தனையில் அசுர மனப்பான்மை உருவாக இக்காற்று மண்டலம் காரணமாவதுடன் பூமியை சூரியனின் புறஊதாக் கதிர்களின் தாக்கத்திலிருந்து காக்கும் ஒசோன் படலத்தில் துவாரம் ஏற்படுவதற்கும் இது காலாகின்றது. எனவே அனைத்துப் பிரச்சனைகளுக்கும் மொத்தத்தில் மரங்களின் செறிவு குறைவுபட்டமையே காரணமாகும் என்பதை நாம் உணரக்கூடியதாக உள்ளது. எனவே மரங்களை நடவேண்டும் என்பதில் அக்கறை கொள்ளும் நாம் கூடுதலாக எமக்கு மிகுந்த பொருளாதார வளம் அளிக்கக் கூடிய தென்னம்பிள்ளைகளை நட்டு வளர்க்க வேண்டும் என்பதிலேயே பெருமளவில் அக்கறை கொள்ள வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் ஏதேனும் விசேட வைபவ நினைவாக, பிறந்தநாள் நினைவாக, அல்லது குறிப்பிடத்தக்கதான முக்கிய நிகழ்ச்சிகளின் நினைவாக ஒவ்வொரு தென்னம்பிள்ளையினை நட்டு நீரூற்றி பேணி வளர்த்து வருதல் மூலம் நமக்கும், வீட்டுக்கும், நாட்டுக்கும் சேவை செய்த பெருமையைப் பெற்றவர்களாவோம்.

நிற்க,

எமது வெளியீடுகளில் பெரும்பாலும் ஐந்துவித அணுக்கள் என்ற விடயத்தினைப் பற்றிக் கூறி வந்துள்ளோம். தொடர்ந்தும் கூறிவருகின்றோம். இவ்விடயமானது சிலவேளைகளில் எமது வெளியீடுகளைத் தொடர்ந்து வாசிப்பவர்களுக்கு அவசியமல்லாத விடயமாகவும். சலிப்புத்தட்டும் விடயமாகவும் இருக்கக்கூடும் என்பதனை நாம் அறிவோம். ஆனாலும் எமது வெளியீடுகளை தற்பொழுதே முதன் முதலாக வாசிக்கக் கூடிய தருணம் ஏற்பட்டுள்ள புதிய வாசகர்களுக்கு இவை மிகவும் பயனுள்ள விடயமாகும் என்பதையும், அதேவேளை எமது வெளியீடுகளை வாசிக்கின்ற வாசகர்களின் தொகை தற்போது அதிகரித்து வருகின்றன என்பதை எமக்கு நாளாந்தம் வந்துசேரும் கடிதங்கள் வாயிலாக அறிந்து கொண்டு தொடர்ந்தும் ஐந்துவித அணுக்கள் பற்றிய மேலும் விளக்கங்களைத் தர முனைகின்றோம்

ஐந்துவித அணுக்கள் என்பதைப் பற்றி நாம் மென்மேலும் விரிவாக ஆராயும் பொழுது மேலும் பல உண்மைகள் தெரியவருகின்றன. தெய்வத் தமிழ்ப் புலவர் திருவள்ளுவரும் தனது குறலிலே,

> ''சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற
> ஐந்தின் வகை தெரிவான் கண்ணே உலகு''

என்று கூறியுள்ளமையையும் நோக்குமிடத்து சுவை நீரையும், ஒளி தீயையும், ஊறு நிலத்தையும், ஓசை ஆகாயத்தையும், நாற்றம் காற்றையும் குறிக்கின்றது என்பதனை உணர்ந்து கொண்டு இவற்றின் வகையினை, தன்மையினை உணர்ந்து கொள்பவர் கண்ணே இவ்வுலகம் தங்கியுள்ளது என வள்ளுவர் கூறியுள்ளார் என்பதிலிருந்து இவை பற்றி நாம் விளக்கமாக அறிந்திருக்க வேண்டியதன் அவசியம் உணரப்படுகின்றது.

ஐந்துவித அணுக்கள் (ஐந்து பூதங்கள்) என்று கொள்ளப்படுகின்ற நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே, ஐம்பொறிகள் என்று கூறப்படுகின்ற மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியனவும், ஐம்புலன்கள் என்று கூறப்படுகின்ற சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பனவும் தெளிவுபடுத்தப்படுகின்றன. நிலம் என்பது பொறிகளிலே மெய் எனவும் புலன்களிலே ஊறு எனவும், நீர் என்பது பொறிகளிலே வாய் எனவும் புலன்களிலே சுவை எனவும், தீ என்பது பொறிகளிலே கண் எனவும் புலன்களிலே ஒளி எனவும், காற்று என்பது பொறிகளிலே மூக்கு எனவும் புலன்களிலே நாற்றம் எனவும், ஆகாயம் என்பது பொறிகளிலே செவி எனவும் புலன்களிலே ஓசை எனவும் கொள்ளப்படுபவையாகும்.

இந்த ஐந்துவகை அணுக்கள் அனைத்து உயிர்களிலும், பொருட்களிலும்விகிதாசார அளவுகளில் வித்தியாசமடைந்து காணப்படுகின்றன.



இவ் விகிதாசார அளவு வேறுபாடுகள் வெவ்வேறுபட்ட இடங்களில் வெவ்வேறுபட்ட சூழ்நிலைகளில் வெவ்வேறுபட்டனவாக மாற்றமடைகின்றன உயிரினங்கள் எல்லாமே வெவ்வேறுபட்ட இடங்களில் வெவ்வேறுகுண இயல்புகளைக் கொண்டிருப்பதன் காரணம் இவ் ஐந்துவித அணுக்களின் விகிதாசாரத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களேயாகும். (ஐந்துவித அணுக்களின் விகிதாசார மாற்றங்கள் குறித்து ஏற்கனவே எமது வெளியீடுகளில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம்)

ஐந்துவித அணுக்களின் சேர்மானத்திற்கு ஏற்பவே ஒவ்வொரு ஆன்மாவினதும் கிரகிக்கும் ஆற்றல் அமைகின்றது.

ஒவ்வொரு ஆன்மாவும் தன்னகத்தே கொண்டுள்ள ஐந்துவித அணுக்கூறுகளுக்கு ஏற்பவே செயற்படுகின்ற போதும் சூழலில் எவ்வகையான அணுக்கூறு கூடுதலாக அமைகின்றதோ அவ் ஆன்மா அவ் அணுக்கூறின் தன்மைக்கேற்ப தன்னை மாற்றிக்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படுவது தவிர்க்கவியலாததாகின்றது.

தாவர வர்க்கத்தினை எடுத்து நோக்குவோமானால் சிலவகையான மரங்கள் நீரணுவினைக் கூடுதலாகக் கிரகிக்கும் ஆற்றலுள்ளனவாகக் காணப்படுகின்றன (பப்பாசி, முருங்கை,) இவ்வகையான மரங்கள் பலமற்றவையாகவும் காற்றின் விசைக்கு ஈடுகொடுக்கமாட்டாது முறியக்கூடிய தன்மை உள்ளவையாகவும் காணப்படுகின்றன. இவை நில அணுவைச் ஒரளவு கிரகிக்க முடியாது நீரணுவையே கூடுதலாகக் கிரகிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளமையே இதற்குக் காரணமாகும் இவற்றின் ஐந்துவித அணுக்களின் விகிதாசார அளவுகளில் நீர் கூடுதல் விகிதாசார அளவினைக் கொண்டுள்ளமை தெளிவாகும்.

ஐந்துவித அணுக்களில் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய அணுக்களைச் சராசரியாகக் கிரகிக்கும் ஆற்றலுடைய தாவர வர்க்கங்கள் ஓரளவு சுமாரான பல முள்ளவையாக தமது உடலை ஆக்கிக்கொண்டுள்ளன (மாமரம், பலாமரம்)

ஐந்துவித அணுக்களில் நில அணுக்களைக் கூடுதலாகக் கிரகிக்கும் தாவரங்கள் மிகவும் வைரமுடையவையாகக் காணப்படுகின்றன (பனைமரம்) இத் தாவர வர்க்கங்களிலே உள்ள விதம் விதமான இலை, பூ, காய் இவைகளுக்கு மூலகாரணம் அவற்றின் கிரகிக்கும் ஆற்றலிலே ஐந்துவகை அணுக்கூறுகளின் விகிதாசாரத்தில் காணப்படும் மாற்றங்களேயாகும்.

ஒவ்வொரு உயிரினத்திலும், ஓரறிவு தொடக்கம், ஆறறிவு படைத்த உயிரினங்கள் வரை கிரகிக்கும் ஆற்றல் விதம் விதமாய் அமைந்த பல இனங்களையும் நாம் காண்கின்றோம். நீரிலே வாழுகின்ற உயிரினங்களிலே நீரணுக் கூடுதலாக அமைந்த மீனினங்கள் சதை

கூடுதலாக அமைந்துள்ளதையும், நிலஅணு கூடுதலாக அமைந்த மீனினங்கள் அதற்கேற்ற எலும்பு கூடிய உடலமைப்பைக் கொண்டும் விளங்குவதையும் காண முடிகின்றது. எனவே இவற்றின் அடிப்படைக் காரணம் ஒவ்வொரு உயிரினங்களிலும் காணப்படுகின்ற ஐந்துவித அணுக்கூறுகளின் விகிதாசாரங்களில் உள்ள மாற்றங்களேயாகும்.

ஒவ்வொரு உயிரிலும் எந்தவித அணுகூடுதலாக அமைந்துள்ளதோ அதற்கு ஏற்பவே அவ் உயிரின் கிரகிக்கும் ஆற்றலும் அமைந்திருக்கும். எந்தவகையான அணுக்களைக் கூடுதலாகக் கிரகிக்கின்றனவோ அவற்றிற்கேற்ப அவ் உயிரினங்களின் குண இயல்புகளும் அமைந்துவிடுகின்றன. அதேவேளை அவ் இடத்தின் சூழ்நிலையில் உள்ள ஐந்துவித அணுக்கூறுகளின் விகிதாசார மாற்றம் மாறுபட்டதாகக் காணப்படுமிடத்து அச் சூழலின் ஐந்துவித அணுக்கூறுகளின் தன்மைக்கேற்ப அவ் உயிரினங்களின் குண இயல்புகளும் வலிந்து மாற்றமடைகின்றன.

காற்றணுவானது உயிரினங்களின் குண இயல்புகளில் மாற்றத்தினை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. காற்றணு சுத்தமானதாகக் காணப்படும் சூழ்நிலைகளில் உள்ள உயிரினங்களின் குண இயல்புகள் சிறந்தனவாகக் காணப்படுகின்றன. அதேவேளை அசுத்தமான காற்றணுக்களை உடைய சூழ்நிலையில் வாழுகின்ற உயிரினங்கள் குண இயல்புகளை சிறப்புடையதல்லாத வகையில் கொண்டுள்ளமையையும் நாம் காணமுடிகின்றது.

காற்றணுவில் காணப்படும் பிராணவாயுவே இரண்டறிவு தொடக்கம் ஆறறிவு வரையான உயிரினங்களின் உயிர்வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதாகும், சுத்தமான காற்றணு என்பது கூடுதவான பிராணவாயுவைக் கொண்டதாக இருக்கும். சுத்தமான காற்றணுவினை சுவாசிக்கும் உயிரினங்களின் குண இயல்புகள் சிறந்தவையாகக் காணப்படுவதையும் நாம் அறிந்துள்ளோம். எனவே சுத்தமான காற்றணுவினை சுவாசிக்கக் கூடியதான வழிவகைகளை நாம் எவ்வாறு இழந்துள்ளோம், எவ்வாறு மீட்கலாம் என்பது பற்றியும் இவ்விடயத்தில் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

காற்றணுவில் காணப்படுகின்ற கரியமிலவாயுவையே தாவர இனங்கள் பெரும்பாலும் பகலில் சுவாசிக்கின்றன. தாவர இனங்கள் பிராணவாயுவை வெளிவிடுகின்றன. (பிராணவாயுவின் விகிதம் அதிகமாகவுள்ள காற்றணு) எனவே தாவரங்கள் வெளிவிடும் இதனைச் சுவாசிக்கின்ற உயிரினங்கள் சுத்தமான காற்றைச் சுவாசிக்கின்றன என உணரலாம். ஆகவே பெரும்பாலும் பெரும் தாவர வர்க்கங்கள் கூடுதலாகக் காணப்படுகின்ற சூழலில் வாழும் மனிதர் சுத்தமான காற்றைச் சுவாசிக்கக் கூடியதாகவும் குண இயல்புகளில் சிறந்தவர்களாக



இருப்பார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கனவாகும். எனவே தாவர வர்க்கங்களின் செறிவானது மனிதரது குண இயல்புகளை சிறந்தவையாக்கும் என்பதை நாம் உணரலாம்.

பலநூறு வருடங்களுக்கு முற்பட்ட காலத்திலே தாவர வர்க்கங்கள் செறிந்து காணப்பட்டுள்ளமையை நாம் அறிந்துள்ளோம். எனவே அக்காலப் பகுதிகளில் வாழ்ந்த மனிதர்கள் நல்ல காற்றைச் சுவாசித்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. எனவேதான் அவர்கள் நற்சிந்தனையுடையவர்களாக இருந்து பெரும்பாலும் வீண் பிரச்சனைகளுக்குள்ளாகாது வாழ்ந்து வந்துள்ளார்கள். ஆனால் இன்றைய நிலையினை நாம் அன்றைய நிலையோடு ஒப்பிட்டுப் பார்ப்போமானால் இவ்இரு நிலைகளுக்கும் இடையேயான வேறுபாட்டின் அடிப்படைக் காரணம் என்ன என்பதை நாம் இலகுவில் விளங்கிக் கொள்ளலாம். இன்று பூமியில் எப்பகுதியினை எடுத்துக் கொண்டாலும் அபிவிருத்தி என்ற நோக்கில் காடுகள் அழிக்கப்பட்டு வருவதனையும், இயற்கைக்கு விரோதமான செயற்பாடுகள் மூலம் காடுகள் அழிக்கப்பட்டு வருவதனையும் நாம் நாள்தோறும் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. எனவே அழிக்கப்பட்டுவரும் தாவர இனங்களினால் பயன்படுத்தக் கூடியதான கரியமிலவாயு காற்று மண்டலத்தில் செறிவடையும் என்பதில் வியப்பேதுமில்லை. இதிலிருந்து காற்று அசுத்தமடைகின்றது என்பதனையும், அசுத்தமான காற்றினைச் சுவாசிக்கின்ற மனிதர்களின் சிந்தனைகளும் அசுத்தமடைகின்றன என்பதையும் சிந்தனையில் அசுத்தமுடையவர்களான மனிதர்களினால் உலகில் பிரச்சனைகள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன என்பதையும் நாம் எளிதில் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

எனவே பொதுவாக இப்பூமி எங்கணும் சுத்தமான காற்று குறைவாகவே உள்ளதை நாம் உணர முடிகின்றது. காற்றின் சுத்தமாக்கப்படுகின்ற தன்மை தாவர அழிவினால் குறைவடைவதனால் அவற்றைச் சுவாசிக்கும் உயிர்களின் எண்ணங்களும் அதற்கேற்ப மாறுபாடாக அமைத்துள்ளதை உணர முடியும்.

எமது இதயத்தை இயக்குகின்ற காற்றின் மூலச்செறிவானது சுத்தம் குறைந்த தன்மையினாலேயே ஏராளமான வீண் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. இப்பிரச்சனைகளை நீக்க முயலும்போது வெவ்வேறு விதமான பிரச்சனைகள் ஏற்படுகின்றன. சிந்தனைகள் தொடர்ந்தும் தூய்மையற்ற நிலையினில் இருக்கும் போது பிரச்சனைகள் தொடரவே செய்யும். எனவே காற்றினை சுத்தமாக்குவதன் மூலமே இதனை நாம் மாற்றியமைக்க முயல வேண்டும். காற்றினை சுத்தமானதாக ஆக்குவதற்கு எவ்வளவோ தியாக சேவைகளைச் செய்ய முடியும். காற்றைச் சுத்தமடையச் செய்வதற்காக தாவர வர்க்கங்களை நாம் நாட்டலாம்.

இவ்வாறு செய்யும் போது தென்னம்பிள்ளையினை நடுவதில் முதலாவதாக ஆர்வம் காட்டலாம். இதனை நட முடியாதவர்கள் வேறு எவ்வித பயன்தரும் மரங்களையும் வளர்த்துக் கொள்ளலாம். இதனை ஒவ்வொருவரும் இறைவனுக்குச் செய்யும் பணியாகக் கருதிச் செய்வார்களாயின் ஒரு பத்து வருடங்களில் நாடு தன்னிறைவு எய்தும், பொருளாதாரம் மேன்மையடையும். அத்துடன் காற்றைச் சுத்தமாக்குவதன் காரணமாக உயிரினங்களின் எண்ணங்கள் மேன்மையடையும், தியாக பணம் உருவாகும் போது சாதி, சமய, இன வேற்றுமை மறைந்துவிடும், எல்லோரும் வாழ வேண்டும் என்னும் மனநிலை எல்லோருக்கும் ஏற்பட முடியும்.

எனவே இவ்வாறானதொரு மாற்றத்தை ஏற்படுத்துவதில் ஐந்துவித அணுக்களின் விகிதாசார மாற்றங்களே அடிப்படைக் காரணிகளாக இருக்கின்றன என்பதையும் நாம் இங்கு காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே ஐந்துவித அணுக்கூறுகளின் விகிதாசார மாற்றம் காரணமாகவே சிந்தனைகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதையும் நற்சிந்தனைகளை உடையவர்களாக இருப்பதற்கு நல்லகாற்றைச் சுவாசிக்க வேண்டும் என்பதையும் தெரிந்து கொண்டுள்ள நாம், சூழலில் நல்ல காற்றினை நிலவச் செய்வதற்கான வழிமுறையாக மரங்களை வளர்க்க வேண்டும் என்பதையும் கருத்திற் கொண்டு அவ்வாறு மரங்களை வளர்க்கும் போது தென்னம்பிள்ளைகளை நடுவதில் முதலிடத்தினைக் கொடுப்பதன் மூலம் மிகுந்த பயனை அடையலாம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எமது அயலிலுள்ள கோயில்கள், மற்றும் பொது இடங்களின் சுற்றுப்புறங்களிலும், வீடுகளிலும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தென்னம்பிள்ளையினை நட்டு நீரூற்றி வளர்க்கலாம்.

கோயில் தொண்டாகக் கருதி கோயில்வீதி ஓரங்களிலேயும் எல்லைப்புறங்களிலேயும் ஒவ்வொரு வீட்டினரும் தமது காணிக்கையாக ஒவ்வொரு தென்னம்பிள்ளை நட்டு ஒவ்வொரு செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் அவற்றிற்கு நான்கைந்து வாளி தண்ணீர் அபிஷேகம் செய்து வருவோமாயின் அத்தெய்வம் கண்முன்னே பலன் கொடுப்பதனைத் தரிசிக்க முடியும். அதன் பயனாக நாட்டு மக்களின் நலன்கள் மேலோங்கும். 5, 6 வருடங்களில் இத் தென்னைகள் மழைமுகிலைக் கிரகித்து காலாகாலத்தில் மழைவீழ்ச்சியும் பெருகுவதற்கு இடமுண்டு. இக்கைங்கரியத்தினால் ஏராளமான நன்மைகள் உருவாகும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

●



உ—

# எம். எஸ். உதயமூர்த்தி

## வாழ்க்கைக் குறிப்பு

மனோவியலைப் பற்றி கடந்த பதினைந்து ஆண்டுகளாக இந்தியாவிலே தமிழ்ப் பத்திரிகைகளிலே கட்டுரை எழுதி வந்தவர், தற்போதும் எழுதி வருபவர் – டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி. மனோதத்துவங்களை வாழ்க்கைக்கு எப்படிப் பயன்படுத்துவது என்பதைச் சுமார் 14 நூல்களில் எழுதியுள்ள இவர் சிறந்த ஆசிரியர் என்ற விருதும், ''புல்பிரைட்'' அறிஞர் ( *Full Bright Scholar* ) என்ற கௌரவமும் உரித்துடையவராவார்.

இந்தியாவிலே தமிழ்நாட்டிலே தஞ்சை மாவட்டத்திலே மயிலாடுதுறை என்ற இடத்திலுள்ள விளநகர் என்ற கிராமத்திலே திரு. சிங்காரம் – கமலம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்த இவர் மயிலாடுதுறை உயர்நிலைப் பாடசாலையிலும், பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இளநிலை, முதுநிலை பட்டப்படிப்புகளையும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் வேதியலில் மற்றோர் முதுநிலைப் பட்டத்தையும் பெற்றபின் மேற்படிப்புக்காக அமெரிக்கா சென்றார். அதுவரை குடந்தை அரசினர் கல்லூரியிலும், கிண்டி பொறியியல் கல்லூரியிலும் வேதியல் ( *Chemistry* ) உதவிப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

அமெரிக்காவில் விஸ்கான்சின் பல்கலைக் கழகத்தில் மருத்துவ இரசாயனத்தில் ''டாக்டர்'' பட்டம் பெற்று பத்தாண்டுகள் அங்குள்ள மவுண்ட் செனாரியோ கல்லூரியிலும், மின்னசோட்டா, ஐடஹோ பல்கலைக் கழகங்களிலும் பேராசிரியராகக் கடமையாற்றினார்.

ஆசிரியத்துறையை விட்டுவிலகி விஸ்கான்சினில் உணவு தயாரிக்கும் நிறுவனம் ஒன்றில் அதன் தலைமை நிர்வாகியாக பணியாற்றிய இவர் 1982–ல் ''பார்க்கிளே கெமிக்கல்ஸ்'' ( *Barclay Chemicals*)

என்ற தனது சொந்த இரசாயனப்பொருள் உற்பத்தி நிறுவனத்தைத் தொடங்கினார். ''அமெரிக்காவில் தொழில்துறையில் உள்ளவர்களில் யார், யார்'' ( *Directory of who is who in Business and Finance in the USA* ) என்ற நூலில் அவரது பெயர் இடம்பெற்ற பெருமையும் இவருக்கு உண்டு. தனது தொழில் நிறுவனத்தை புதல்வரிடம் ஒப்படைத்துவிட்டு 1987-ல் நிரந்தரமாக இந்தியா வந்து இன்று சென்னையில் வசித்து வருகிறார்.


தனது கட்டுரைகள், பேச்சு, செயல்களின் மூலம் ஆக்கப்பணிகளைச் செய்து மக்களைத் தட்டி எழுப்பி வருகின்றார்.

தனது அறிவுக்கும், திறமைக்கும் ஏற்ற ஒரு புதிய சமுதாயத்தை தமிழகம் பெறவேண்டும் என்று விரும்பி உழைக்கின்றார்,

டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி.

ஏ —

# பனை வெல்லம்



எவ்வளவோ ஆசைகளை நெஞ்சில் சுமந்தபடி எங்கள் தாயோடும் அன்புத் தந்தையோடும் அருமைமிகு உடன்பிறப்புக்களோடும் பாசத்துக்குரிய மனையாளோடும் நேயத்திற்குரிய மக்களோடும், ஊரோடும் உறவோடும் சேர்ந்து உண்டு உறங்கிக் களித்து வாழுகின்றவர்கள் நாங்கள்.

விதைகளாய் வடலிகளாய் பருவத்துப் பாளைதள்ளும் மருந்தாய், விருந்தாய், பெரிதாய் வளரும் தமிழீழ முதுசொத்துக்களான பனையின் பயன்படு பொருட்களின் சிறப்புக்களை அறியாது வாழ்வதும் நமக்குத் தெரிந்தது தான்



வயதில் பெரியவர்கள் தங்கள் வாழ்வியல் உண்மைகளை குழந்தைகளுக்குக் கொடுக்க மறந்து போவதால் பெறுமதி பெற்ற உடல்நலக் கருத்துக்கள் எம்மை விட்டும் ஓடிப்போகின்றன. நூற்றாண்டுக்கு முன்னர் பதிப்பிக்கப்பட்ட ''பதார்த்த குணசிந்தாமணி'' எனும் நூலிலிருந்து பெற்ற சில பாடல்களைக் காணின்.

'' கங்கு பனை வெல்லத்தால் வாதபித்தம் அறும்
சன்னி நோய் வல்லரிசி குன்மமுறும். ''

'' மேகவனலும் மிகவீசு சூரிகையர்
வாகமுறுகனலும் மாறும்காண் – மோனத்திற்
தங்கிவரும் நீர்சுருக்குத் தாகவெப்பமும் தணியும்
மிக்கு பனங்கற்கண்டுக்கே. ''

பனங்கற்கண்டு பற்றிய, பனை வெல்லத்தைப் பற்றிய பாடல்கள் இவையாகும்.

இன்று தமிழீழத்திலே ஏற்படுத்தப்பட்ட போரின் அழுத்தத்தினால் தமிழ் மக்களை வருத்தும் நோய்களுக்கான மருந்துகள் எம்மிடை இல்லாதுள்ளன. நீரிழிவு, குன்மம் ( *Ulcer* ), மார்பு எரிச்சல், உடல் சூடு, பித்தம், கிரந்தி நோய்களுக்கும், குறிப்பாகக் குழந்தைகளுக்கு வரும் காய்ச்சல், மந்தம், குக்கல் ஆகிய நோய்களுக்கும் மருந்தாகப் பயன்படும் பனங்கற்கண்டு ( கல்லக்காரம்) முறையே 1990, 1991, 1992-ம் ஆண்டுகளில் 102 கிலோ 1265 கிலோ, 52 கிலோ எனும் விகிதத்தில் உற்பத்திச் சரிவை எட்டியுள்ளதிலிருந்தும், பனைவெல்லப் பாவனை 1990, 1991, 1992-ம் ஆண்டுகளில் முறையே 3565 கிலோ 97386 கிலோ, 100847 கிலோவாகவும் அதிகரித்துக் காணப்பட்டுள்ளதிலிருந்தும் பனைவெல்லப் பாவனை நெருக்கடியான காலகட்டத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளதனை தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

மிக நீண்ட காலமாக குடிசைக் கைத்தொழிலாக இருந்த பதநீர், பனங்கட்டி, பனைவெல்லம் உருவாக்கல் முறை இப்போது புதிய வடிவம் பெற்ற தொழிலாக ஏற்றம் கண்டுள்ளது. எமது மொத்தப் பனைவளத்தின் கணிசமான பங்கினை பதநீர் பெறப் பயன்படுத்துவதன் மூலம், நமது மண்ணில் ஊட்டம் மிகுந்த வெல்ல உணவு உற்பத்தி செய்யும் ஓர் பெரும் தொழிற்துறைத் தோற்றத்தினை ஏற்படுத்திவிட முடியும். பதநீர் இறக்குதலில் மனித உழைப்பே தேவைப்படுகிறது. ஆனால் அதை வெல்லமாக மாற்றியமைக்க பல செலவுகள் ஏற்படும். கூடவே தொழில் உபகரணங்களும் தேவைப்படும். எனவே தொழிலாளர்களின் கூட்டு முயற்சியும், தொழில்நுட்ப அறிவும் ஒன்றாகியே இயங்கும் இத் தொழிலை வளர்த்திடத் தேவையானது மக்கள் ஆதரவு தான்.

தாங்கள் உருவாக்கும் பொருள் சந்தைக்கு வந்து உடனடியாகத் தீர்ந்துவிடுமென்றால் பொருளை உருவாக்க உற்பத்தியாளர் ஏன் விரும்பமாட்டார்கள்.

ஊட்டச்சத்து நிறைந்ததும் உயிர்ச்சத்துக்களைக் கொண்டது மான பனைவெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு இவைகளை உண வோடு சேர்த்து உண்பவர்கள் உடல் உறுதிபெற்று வாழ்வர் என்பது மருத்துவர்களின் முடிவாகும். பனைவெல்லம் எம் மனங்களை வெல்லட்டும்.

பலருக்கு அணுகுண்டுக்குப் பயன்படுத்தப்படும் கணநீர் பற்றிய விபரங்கள் தெரியும். எம்அருகே எம் முயற்சியின்றி வளர்ந்து தனது சதைமுதல் கால்வரை பயன்தரும் பனை பற்றித் தெரியாது. அது தரும் பயன்களில் ஒன்றான பதநீர் பற்றியும், அதன்மூலம் இன்றைய எமது தேவைக்குப் பெறக்கூடிய பயன்பாடு பற்றியும் தெரியாது. பெறப்படும் பொதுஅறிவு பயனற்ற பொதுஅறிவாக இருக்கக்கூடாது.

எனவே பதநீர் பற்றிய அறிவை வளர்த்துக் கொண்டு பனை வெல்லத்தின் மூலம் நாம் பயன்பெற்று நாடும் பயன்பெற, வளம்பெற உறுதி பூணுவோம்.

நன்றி: சாளரம் - ஆனி 1993

சாளரம் 1992 மே - யூன் இதழில் விநாயகர் தரும நிதியத்தின் வளர்ச்சிக்கு வாழ்த்துத் தெரிவித்தமையையிட்டு எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
உயர்க சாளரம்.

— நிறுவனர்,
01-08-93 விநாயகர் தரும நிதியம்.



எ —

# கடவுள் நம்பிக்கை

கடவுள் நம்பிக்கை என்ற சொற்றொடர் எப்பொழுதும் மக்கள் வாய்மொழியாக விளங்கினும், இத்தொடரில் அமைந்து கிடக்கும் ஆழ்ந்த பொருளை அறிந்து தெளிபவர் தாம் அரியர். கடவுளை உண்மையாகவே நம்புகின்றவர் எப்படிப்பட்டவராயிருப்பரெனின் விசு வாசமாகிய கண்ணால் பார்த்தறிகின்ற உண்மை நம்பிக்கையுள்ளவ ராயும் எல்லாம் உணர்ந்தவராகிய தலைவர் இவ்வுலகத்தை ஒழுக்க வழியில் நிலைபெறச் செய்கின்றார் என்பதை உணர்ந்திருக்கின்றவரா யும், கடவுள், தந்தை, தாய் அன்பில் தனையரைத் தழுவும் இயல் புடையவர் என்பதைத் தெளிந்தவராயும் இருப்பர். நம்பிக்கையாவது அன்பின் அருங்கனியாகிய பக்தியின் முதிர்ச்சி கடவுளை மெய்யாக நம்பி அவரிடத்தில் பொய்யற்ற அன்பு செலுத்துகின்றவர்களே நம்பிக்கை என்ற வார்த்தையால் குறிக்கப்பெறும் ஆன்மசுகம், இன்ப நிலை இவற்றை அடையக்கூடும். கடவுளை உண்மையாக விசுவாசித்து நேசிப்பது வாழ்க்கையில் அருமையான காரியம். (செய்கை) கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று கேள்விப்பட்டிருக்கின்றவர் பலர்; அவரை உண்மையாக உணர்ந்திருப்பவரோ மிகச்சிலர் என்று உபநிடதமும் உரைக்கின்றது. அனேகர் கடவுளென ஒருவர் உளரா இலரா என்ற விசாரம் புரியவும் விரும்பாமலேயே கடவுள் நம்பிக்கையை உறுதியாகக் கொண்டிருக்கின்றார்கள். இங்ஙனம் உறுதியான கொள்கையினராதல் அவரவர் மூளையின் இயல்பைப் பொறுத்து ஏற்படும். ஆனால் இங்ஙனம் மௌன (விசாரணையற்ற) நம்பிக்கை ஞானவாழ்வையளித்து பிரவிர்த் திக்கச் செய்கின்ற (வளர்க்கின்ற) உண்மை நம்பிக்கை முற்றும் வேறு பட்டதே.

உண்மை நம்பிக்கையென்றால் கடவுளை உண்மையாகவே உணர்ந்து நம்புதல். இந்த நன்னிலையை எய்தக் கருதுவதே ஆத்ம முயற்சி. ஆனால் உண்மை நம்பிக்கை நிலை ஒருவர்க்கு எளிதில் விரை வில் ஏற்படுவதன்று. நாளடைவில் படிப்படியாக அமைவது. தெய்வீக உண்மைகளை ஞானக்கண்ணால் ஓர்ந்து பார்ப்பதினாலும், நம்மை நாடோறும் சூழ்ந்திருக்கின்ற உலகமாயையில் உழலவிடாது உறுதிப் படுத்துவதினாலும், நித்தியமும் ஆத்மீகமுமான விசயங்களை அடிக்கடி இடையறாது சிந்திப்பதினாலுமே பரமான்மாவுக்கும் ஜீவான்மாவுக்கும்

(பதிக்கும் பசுவுக்கும்) உள்ள சம்பந்தத்தை (ஐக்கியத்தை) உறுதிப் படுத்தக் கூடியவர்களாகின்றோம். நம்முடைய உள்ளத் தூய்மைக்கும் ஓர்மைக்கும் ஒத்தபடி கடவுளை உண்மையாகவே காண்கின்றோம். கடவுள் உண்மையை உணர்கின்ற உணர்ச்சியே நம்பிக்கையென்க. எப்பொழுது நாம் கடவுளை உண்மையாக நம்ப முற்படுகின்றோமோ அப்பொழுதுதான் அவரை உண்மையாக நேசிக்க ஆரம்பிக்கின்றவரும் ஆகின்றோம். மதம், அன்பு இவ்விரண்டின் கூட்டுறவினால் தோன்றுவதே நம்பிக்கை. ஆத்மீக வாழ்வில் ஆத்மீக அனுபவத்தால் பூரண நம்பிக்கை அடைவதைப் போன்ற அருமையான விசயம் மற்றொன்றில்லை.

நம்மைச் சுற்றிலும் பொருந்தியிருக்கும் விசயங்கள் கடவுளிடத்தில் உண்டாகியிருக்கும் நமது நம்பிக்கையை அசைத்து அழிக்கக் கூடியவை. நமது தனிவாழ்வில் ஏற்படும் சோதனா கஷ்டங்களும், ஆத்ம சமாதானத்தை அடிக்கடி கெடுக்கும் ஆசைப் போராட்டமும் நம்மனதை அவநம்பிக்கைக்கு உள்ளாக்கிக் கடவுள் அருகில் இருக்கின்றார் என்பதையும் ஐயுறும்படி செய்கின்றன. இவ்விதச் சோதனைகளையும் இடுக்கண்களையும் பொறுத்து வருவோமாயின், நல்லெண்ணம் நாளடைவில் நிலைப்படும். நம் கொள்கையின் உறுதியைப் பரீட்சிக்கின்ற சந்தர்ப்பங்கள் இப்படிப்பட்டவைகளே, கடவுளை நம்பி அவரை உண்மையாக நேசிக்கின்ற ஒருவன் நம்பிக்கைக் குறைவுக்காளாகாமல் தன்னுடைய கஷ்டங்களிலும் கடவுள் துணைபுரிவார் என்னும் உறுதியான நம்பிக்கையுடையவனாக இருப்பான். கடவுள் நம்பிக்கை தளர்வதற்கு மற்றொரு காரணமும் உண்டு, உலகத்தில் அறம் தேய்ந்து மறம் பெருகுவதைக் காண்கின்றோம். இந்த நிலைமையிலும் நம்பிக்கையுடையவருள்ளம் கடவுளே கதியென்று கருதிக் கடவுளே ஏழைக்கிரங்கு, உதவிசெய் என்று ஓலமிட்டிறைஞ்ச முற்படுகின்றது.

இப்படிப்பட்ட துன்பசமயங்களில் நம்பிக்கையாலேற்படுவதாகிய நல்லொழுக்கமென்னும் அமைதியைக் காக்கும் பலமுடையவராவர். இப்பலமே யாவர்க்கும் வேண்டப்பெறுவது. தெய்வீக வளர்ச்சிக்குரிய தனி முயற்சிகளை சில எதிர்பாராத சந்தர்ப்பங்கள் தத்தளிக்கச் செய்கின்றன. இத்தகைய தத்தளிப்பு தடுமாற்றங்களிலின்று கரையேறிச் சமாதானம் அடைவதற்காக நாம் கைக்கொள்ளும் நன்முயற்சிகளும் பயன்படாமலொழிகின்றன. இக்காலங்களில் நாம் மிகுந்த விசனத்துடன் கடவுளை நோக்கி முறையிட்டாலும் உடனே ஏற்ற பலனும் ஏற்படுவ



தில்லை. ஆத்ம இன்னமுதமாகிய தியானமும் விருப்பமில்லாத பொருளாகின்றது. உண்மையொளியை உறுகின்ற வகையில் எண்ணிறைந்த கஷ்டங்கள் இருக்கின்றன. அநேகர் துன்பம் பொறுக்கமாட்டாமல் தியானத்தில் பயனில்லை என்று தியானஞ் செய்வதை விட்டுவிடுகின்றார்கள். ஆனால் கடவுளிடத்து உண்மையான பற்று வைத்திருப்பவன் உறுதியாயிருந்து கடவுளருளையே எதிர்பார்க்கின்றான். கடவுட் தியானம் செய்யாதபடி பிரித்துக் கவலைப்படுத்தக் கூடிய துன்பங்கள் அத்தகையவனைக் கடவுள் தியானத்தைப் பதின்மடங்கு ஆர்வத்துடன் செய்யும்படி தூண்டுகின்றன. இதனால் துன்பங்கள் ஒருவருக்கு ஏற்படுவன அவனுடைய உள்ளத்தைச் சுத்தப்படுத்திக் கடவுட்பற்றை அதிகரிப்பிக்கின்றன என்ற உணர்ச்சி உண்டாகின்றது. ஆகவே தனக்கு இடர் ஏற்படும் பொழுதெல்லாம் கருத்துடன் கடவுளை நோக்கித் தியானம் புரிந்து துன்பத்தைப் பொறுத்தலை தனது கடமையென்று உணர்கின்றான், இவ்வித உணர்ச்சியே ஆன்ம வளர்ச்சிக்குறிகுறி. ஆன்ம வளர்ச்சியின் பெருக்கம் அல்லது மேம்பாடு உண்மை நம்பிக்கையின் உயர்வைப் பொறுத்து விளங்கும். இவ்வித உண்மை நம்பிக்கையே கடவுள் பக்தியை நிலைபெற்றதாகவும், கனிவுற்றதாகவும் செய்வது. ஆகவே இம்மையில் தமக்கு உண்டாகும் துன்பங்களைப் பொறுத்து கடவுளிடத்திலும் குறையாத நம்பிக்கையுடன் தியானம் செய்கின்றவர்கள் திடமான அன்பையும் ஆன்ம இன்பையும் அடைந்து சிறப்பார் என்க.

நன்றி — 1925 – தை, மாசி செந்தமிழ்ச்செல்வி.
(குறுமுடியான்)

4-ம் பக்கத் தொடர்...

அமெரிக்காவோ தங்கச்சுரங்கம் நிறைந்த வளம் நிறைந்த நாடு. எனவே அமெரிக்காவை பொருளாதாரத்தால் வெல்வது என்பது எந்த நாட்டாலும் முடியாத விடயமாகும். ஆனால் யப்பானோ பூகம்பம் – எரிமலை கொண்ட வளம் குறைந்த நாடு. இவ்வாறு இருந்த போதும் தங்கள் நாட்டின் நில அமைப்பைக் கூறிப்புலம்பி – அமெரிக்கா மீதோ மற்றைய வளம்நிறைந்த நாடுகள் மீதோ குறைகூறித் திரியாது தன் கையே தனக்குதவி என்ற தாரக மந்திரத்தை எடுத்துக் கொண்டு

எந்த நாடும் நினைத்துப் பார்க்க முடியாத அளவில் தொழில்வளத்திலும் தொழில் நுட்பத்திலும் உயர்ந்து - வளர்ந்து ஞானவழியில் சென்று கொண்டு இருக்கிறார்கள் இன்றைய யப்பானியர்கள்.

போரின் மூலம் உலகநாட்டை அடக்கியாள நினைத்த யப்பான் அதன் தாக்கத்தால் தம்நாட்டில் ஏற்பட்ட பேரழிவினால் கற்ற பாடத்தைக் கொண்டு இன்று பொருளாதாரத்துறையில் தனது கவனத்தைச் செலுத்தி, தொழில் வளத்தினால் முன்னேறி உலக நாடுகளுக்கெல்லாம் சிம்மசொப்பனமாய் காட்சியளிக்கும் அளவிற்கு உயர்ந்துள்ளது.

உலகசந்தையில் இன்று கணனி என்றால் என்ன - கனரக வாகனம் என்றால் என்ன - தொலைக்காட்சிப் பெட்டி என்றால் என்ன - வானொலிப்பெட்டி என்றால் என்ன - படம்பிடிப்புத்துறை என்றால் என்ன - துவிச்சக்கர வண்டி, மோட்டார் வண்டி என்றால் என்ன - இப்படியே பல பொருட்களை இப்பகுதிகளில் அடுக்கலாம். அந்தளவிற்கு தமது தொழில்வலு ஆற்றலால் பலதுறைகளிலும் முன்னேறி வல்லரசுகளுக்கு தொழில்துறையில் தானும் ஒரு வல்லரசு என்பதைக் காட்டிய வண்ணமுள்ளது. இத்தனைக்கும் யப்பானியர் இறைவனை நோவது கிடையாது - விதியை நோவது கிடையாது - மாற்றானை நோவது கிடையாது.

நேரம் பொன்னானது என்பதை தமது சூக்கும தேகத்தில் பதித்துக் கொண்டார்கள். தமது மண், தமது மக்கள், தமது மொழி இவற்றை இறைவனாகக் கருதிக் கொண்டார்கள். அவர்களின் சிந்தனை வளத்தால் அவர்களது சூக்கும தேகத்தில் பதிவாகும் ஐவகை அணுக்களின் தொகைகளில் சுயநல அணுக்கள் குறைவதால் பிறப்பை நீக்கும் வழியை அடைகிறார்கள். நாமும் இவற்றை 4, 5 முறையாவது படித்தால் மேல்நிலையடைய முடியும்.

தொழில்மூலம் மனிதனின் கிரகிக்கும் ஆற்றலை வளர்த்து நேரத்தை பொன்னென மதித்து தொழில்வளத்தை தெய்வமாகப் போற்றி அறநெறிச் செயற்பாட்டால் ஞானவழிமுறைகளைக் கைக்கொண்டு, மற்றோர்க்கு முன்மாதிரியாய் - வழிகாட்டியாய் உயர்ந்து நிற்கும் யப்பானை நாமும் பின்பற்றி உயர வேண்டியது எமது ஒவ்வொருவரின் கடமையென நம்புகின்றோம்.

— நிறுவனர்.

# வாழ்த்துகிறோம்

மாற்றம் மக்கள் சஞ்சிகை சித்திரை - ஆனி 93 இதழில்
ஆசிரியரின் கருத்துப் பகுதியில் மாற்றம் மறுபிறவி
எடுக்கும் இக்கொடிய சமூக அமைப்பை
மாற்றும் வரை - என்ற மாற்றம் சஞ்சிகையின்
பெறுமதியான, கனதியான வார்த்தைகளை
வரவேற்கின்றோம். அத்துடன் இதிலுள்ள
கட்டுரைகளும் சமூக அமைப்பை மாற்றக்
கூடிய நல்ல கருத்துக்களை பிரதிபலிப்
பதாய் அமைந்துள்ளது. இச்சஞ்சி
கையை வெளியிடும் தமிழ்த்தாய்
மன்றத்தை நீண்டு வளர்ந்து
வானுயர வாழ்த்துகின்றோம்.

யப்பானியரின் உடலுழைப்பால் பெறப்பெற்ற அறநெறிச் சிந்தனை காரணமாக அவர்களது விஞ்ஞான அறிவு வளர்ந்தோங்கி ஞான வழியை அடைந்து வருகிறார்கள் என்பதை இருகரம் கூப்பி வரவேற்று நாமும் அவ்வழியில் செல்ல ஆர்வம் கொள்வோமாக.

★ சிறுவயதில் பயின்ற தமிழ் மொழியின் செய்நன்றியை என்றும் நினைவு கூர்வோம்.

★ ஞானம் வளர்த்த தமிழ் மொழி வளர உள்ளத்தை நெறிப்படுத்தி உடலுழைப்பை நல்குவோம்.

— நிறுவனர்,
விநாயகர் தரும நிதியம்.

புலோலி மேற்கு.

ள —

## எமது வெளியீடுகளை பின்வரும் விலாசங்களில் பெற்றுக் கொள்ளலாம்

★ பாசையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்றச் சங்கம்

★ சி. சி. வரதராசா
– கொழும்புத்துறை.

★ சிவ. ஆறுமுகசாமி
– கோணாவளை கிழக்கு,
கொக்குவில்.

★ வழி கலை இலக்கிய வட்டம்
– சுன்னாகம்,

★ அஷ்டலட்சுமி கலண்டர் நிறுவனம்
– கண்டி றோட், கைதடி.

★ அன்னை மருந்தகம்
– பருத்தித்துறை.

★ S. K. சாமி — நெல்லியடி.

★ கலைச்சோலை
– வல்வெட்டித்துறை.

★ அபிராமி மருந்தகம்
– நீர்வேலி.

★ சின்னையா ஸ்ரோர்ஸ்
– கொடிகாமம்.

★ சிவம் மருந்தகம்
– சாவகச்சேரி.

★ சூரியா பார்மசி
– புத்தூர்.

★ ரி. வி. பாலா புத்தகசாலை
– இணுவில்.

இச் சஞ்சிகை புலோலி மேற்கு விநாயகர் தரும நிதியத்திற்காக விநாயகர் தரும நிதிய அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.